www.padippakam.com

# செஞ்சக்தி

2009 மே
அணி 02 படை 04
நன்கொடை 10.00 ரூபாய்

மக்கள் விடுதலை முன்னணியின் உத்தியோகப்பூர்வ செய்தித்தாள்
செய்திப் பத்திரிகையாக இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ளது

தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப ஜே.விபி யுடன் அணித்திரள்வோம்!



4

தொழிலாளர் தினம் மே 01



6-7

அமெரிக்க ஜனாதிபதிக்கு பரிசாக அரிய நூல்!



10

# 119வது சர்வதேச தொழிலாளர் தினம்



உலகவாழ் பாட்டாளி வர்க்கம் அபிமானத்துடன் நினைவு கூரும் மேதினம், ஏனைய தினங்களைவிட அதிஉன்னதமான தினமாகும். 1886 மே 01ம் அமெரிக்காவின் சிக்காகோ நகரில் தொழிலாளர்கள் தமக்கு 8மணிநேர வேலைநாள் கோரிக்கையை கோரி பாரிய போராட்டத்தை மேற்கொள்வதற்கு முன்னர் மே 01ம் திகதி என்பது முதலாளித்துவ வர்க்கத்தின் களியாட்ட நாளாகவே கொண்டாடப்பட்டது. சிக்காக்கோ போராட்டத்தில் பாட்டாளி வர்க்கம் பல உயிர்த்தியாகங்களை செய்து , பாரிய போராட்டத்தின் மத்தியில் தமது உரிமைகளை இரத்தம் சிந்தி வென்றெடுத்தது. அது நாள்வரை முதலாளிகளின் களியாட்ட நாளாக இருந்த மே மே 01ம் திகதியை ,உழைக்கும் வர்க்கத்தின் செம்மேதின நாளாக மாற்றியமைத்து உலகவாழ் உழைக்கும் வர்க்கத்துக்கு அந்நாளை உரிமையாக்கி கொடுத்தது. அது தான் உலக பாட்டாளிகள் நினைவு கூரும் 119வது மேதினமாகும்

படிப்பகம்

www.padippakam.com



# சர்வதேச நாணய நிதியத்தின்தாளத்துக்குஆடத்தயாராகும்அரசாங்கம்

**மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற குழுக்களின் தலைவர் தோழர் அனுர திசாநாயக்க**



அரசாங்கம் தற்போது பாரிய பொருளாதார செருக்கடியில் சிக்கித் தடுமாறுகின்றது. 1977க்கு பின்னான அரசாங்கங்கள் இதுவரை கடைபிடித்த பொருளாதாரக் கொள்கை தோல்வியடைந்திருப்பது நன்றாகத் தெரிகின்றது. தற்போது சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை ஏற்று அதனிடமிருந்து கடன் பெற அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிகின்றது. மின்சார சபை சட்டமூலத்தைப் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்தமையையும், அரசாங்கத்தின் தனியார்மய திட்டங்களையும் பார்க்கும்போது இது நன்றாகத் தெரிகின்றது. சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் பல்வேறு நிபந்தனைகளை விதித்து கடன் வழங்கத் தயாராகி வருவதும், இலங்கை அரசாங்கம் அந்த நிபந்தனைகளை ஏற்கத் தயாராகிவருவதும் தெரிகின்றது.

அதேநேரம் உற்பத்திச் செலவீனங்களுக்கு ஏற்ப அரசாங்கம் வழங்கும் சேவைகளை ஈடு செய்யுமாறும் ஆலோசிக்கப்பட்டிருக்கின்றது. மின் கூறொன்றின் உற்பத்திச் செலவை விநியோக வருவாயினால் ஈடு செய்யுமாறும் மின்சார சபை சட்டமூலத்தினால் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. நீர் கட்டணத்தை அதிகரித்ததன் வாயிலாகவும் உற்பத்திச் செலவை ஈடுகட்டும் திட்டமே வகுக்கப்பட்டிருக்கின்றது. மேற்படி நிறுவனங்களிடமிருந்து கடனைப் பெற்றுக் கொள்ளும் முன்னரேயே அவர்களின் நிபந்தனைகளை அரசாங்கம் பூர்த்தி செய்து வருகின்றது. ஐ.தே.க. வின் "இலங்கையை மீளமைத்தல்" திட்டத்தின் கீழ் சர்வதேச நாணய நிதியத்தினதும், உலக வங்கியினதும் நிபந்தனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. அதே நிபந்தனைகளுக்கேற்ப கடன் பெற தற்போதைய அருகாங்கமும் தயாராகி வருவது தெரிகின்றது. எனவே, மேற்படி நிறுவனங்களிடமிருந்து கடன் பெற்றுக் கொள்வதற்காக அவர்களின் நிபந்தனைகளை ஏற்றுக் கொள்வது நாட்டு நலனுக்கு உகந்ததல்ல. சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து கடன் பெற்றுக் கொள்வதாயிருந்தால் அவர்களது நிபந்தனைகளை ஏற்க நேரிடுமென அமைச்சர் நிமல் சிறிபால த சில்வா சமீபத்தில் கூறியிருந்தார்.

தேசாபிமானம், தேசிய பொருளாதாரம் என்று பீற்றிக் கொள்ளும் அரசாங்கம் இன்று ஐக்கியத் தேசியக் கட்சியின் பொருளாதாரக் கொள்கைகளையே பின்பற்றி வருவது தெரிகின்றது. 1977 லிருந்து கடைபிடிக்கப்பட்டுவரும் தவறான பொருளாதார கொள்கையின் காரணத்தால் எமது நாடு வேகமான அபிவிருத்தியைப் பெற்றுக் கொள்ளவில்லை. இதற்கு முன்னிருந்த அரசாங்கம் வெளிநாட்டு வங்கிகளிடமிருந்து கொழுத்த வட்டிக்கு பெருமளவு கடனை பெற்றிருந்தது. உலக வங்கியிடமிருந்தோ, சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தோ அவர்களது நிபந்தனையின் பேரில் கடன் பெறப் போவதில்லையெனவும், வெளிச் சந்தையில் கூடிய வட்டிக்கு கடன் பெறத் தயாரெனவும் முன்பு அரசாங்கம் கூறியது. தாம் நிபந்தனைகளுக்கு அடிபணியாத அரசாங்கமெனவும் கூறியது. எனினும் சர்வதேச நிதியத்திடமிருந்து கடன் பெற்றாலும் அவர்களது நிபந்தனைகளுக்கு அடிபணியப் போவதில்லையென அரசாங்கம் இன்று கூறுகின்றது. இதிலிருந்து அரசாங்கத்தின் இரட்டை வேடம் நன்றாகத் தெரிகின்றது.

# தோட்டத் தொழிலாளருக்கு 500 ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்க குரல் கொடுக்க வேண்டும்

அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தலைவர் தோழர் இரா.சந்திரசேகர்



கூட்டு உடன்படிக்கை நிறைவுபெற்று புதியதோர் உடன்படிக்கைக்கு தொழிற்சங்கங்கள் தயாராகின்ற நிலையில் தோட்டத் தொழிலாளருக்கு 500 ரூபா சம்பள உயர்வை பெற்றுக் கொடுக்கவேண்டுமென ஜே.வி.பி. வலியுறுத்தியுள்ளது.

இது தொடர்பில் அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன் தெரிவிக்கையில்

தோட்டத் தொழிலாளர்களுக்கான கூட்டு உடன்படிக்கை மார்ச் மாதம் 30 ஆம் திகதியுடன் நிறைவு பெறுகின்ற நிலையில் இது தொடர்பான பேச்சுவார்த்தை நடைபெறுகின்றது. தற்போது வாழ்க்கைச் செலவு அதிகரித்திருக்கும் அதேநேரம் தோட்டத் தொழிலாளர்களுக்கான வேலை நாட்களும் குறைக்கப்பட்டுள்ளதனால் தமது நாளாந்த வாழ்க்கையை கொண்டு நடத்த முடியாது அவர்கள் அல்லல்படுகின்றனர்.

இந்நிலையில் கூட்டு உடன்படிக்கை தொடர்பான பேச்சுவார்த்தையில் பங்குபற்றும் கட்சிகள் தோட்டத் தொழிலாளர்களின் நிலையை கருத்தில் கொண்டு 500 ரூபா சம்பள உயர்வையும் கூட்டு உடன்படிக்கையினால் நிறுத்தப்பட்ட வாழ்க்கை செலவு புள்ளியையும் வழங்குமாறும் கோரிக்கை விடுக்கவேண்டும்.

இன்று வாழ்க்கை செலவு புள்ளியிருந்தால் தோட்டத் தொழிலாளர்கள் தமது வாழ்க்கையை ஓட்டிச் செல்வதற்கான சிக்கலை ஓரளவு தீர்த்திருக்க முடியும். இந்நிலையில் தொழிலாளர்கள்படும் இன்னல்களை கருத்தில் கொண்டு பேச்சுவார்த்தையில் பெற்றுக் கொடுக்குமாறு கோருகின்றோம்.

அதேநேரம் அண்மையில் நடைபெற்று முடிந்த மாகாண சபை தேர்தலில் அத்தொழிலாளர்களுக்கு பல்வேறு வாக்குறுதியளித்த மாகாண சபை உறுப்பினர்கள் இதற்காக குரல் கொடுக்கவேண்டும். குறிப்பாக கூட்டு உடன்படிக்கைப் பேச்சில் பங்கு பெறும் கட்சிகளின் மாகாண சபை உறுப்பினர்கள் தமது கட்சி தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றார்.

# இ. போ.ச ஊழியர்கள் மீண்டும் போராட்டத்தில்!



வெற்றிகரமாக முடிவடைந்த இ.போ.ச ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தின் பின்னர் வாழ்க்கை செலவு கொடுப்பனவை சம்பளத்தோதடு சேர்ப்பதற்காக சுற்றறிக்கையொன்று வெளியிடப்பட்டபபோதும் அது வெற்றுத் தாளாகவே இருப்பதாகக் கூறும் அகில இலங்கை போக்குவரத்து சபை ஊழியர் சங்கம், இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட சுற்றிறறிக்கைகளுக்கு ஏற்ட்பட்டகதி இந்த சுற்றறிக்கைக்கும் ஏற்பட்டுள்ள தனால் அதற்கெதிராக ஏப்ரல் 26ம் திகதிக்கு பின்னர் கடுமையான தொழிழற்சங்க நடவடிக்கை மேற்கொள்ளப்போவதாக மேற்படி சங்கம் கொழும்பில் நடைபெற்ற ஊடகசந்திப்பின்போது கூறியுள்ளது.

இதன்போது கருத்து தெரிவித்த இச்சங்கத்தின் பொதுச்செயலாளர் தோழர் லியனகே, ஊழியர்களின் கோரிக்கைகளுக்கு செவிமடுத்து மேற்படி சுற்றறிக்கையை முன்னரேயே வெளியிட்டிருந்தால் கோடிக்கணக்கான ரூபா நட்டம் இ.போ.ச விற்கு ஏற்றபட்டிருக்காதென கூறினார்.

# துறைமுக கஜானா காலி மேலதிகநேர வேலைக்கு வேட்டு!



பொருளாதார நெருக்கடி காரணமாக கொடுப்பனவின்றி மேலதிக நேர சேவையில் ஈடுபடுமாறு துறைமுக ஊழியர்களை நிர்வாகிகள் வற்புறுத்துவதாக துறைமுக வட்டாரங்களிலிருந்து தெரிய வருகிறது. கடந்த ஏப்ரல் 7ம் திகதி நிர்வாகிகளையும், பொறியியலாளர்களையும் சந்தித்த துதைறமுகத்தலைவர், தற்போதையபொருளாதார நெருக்கடி காரணமாக ஊழியர்களுக்கான சம்பளத்தைக் கூட வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இந்நிலை தொடருமாயின் எதிர் வரும் 3 மாத காலத்துக்குள் இக்கட்டான நிலை ஏற்படுமெனவும், ஆகவே, தியாகம் செய்ய தயாராகுமாறு தொழிலாளர்களை கேட்டுக் கொண்ட துறைமுக அதிகார சபையின் தலைவர், மேலதிக வேலைகளுக்கான கொடுப்பனவை எதிர்பார்க்க வேண்டாமெனக் கூறினார்.

இதன்போது கருத்துத் தெரிவித்த துறைமுக ஊழியர்கள், தியாகம் செய்ய வேண்டியது அமைச்சர்களும், அதிகாரிகளுமேயல்லாது தாங்களல்ல எனக் கூறினர். உயரதிகாரிகளும், அமைச்சர்களும் செய்யும் ஊழல், மோசடிகள் மற்றும் வீண் விரயங்கள் காரணமாகவே துறைமுகத்துக்கு இந்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்தனர். அத்தோடு அமைச்சாகள் தமக்குத் தேவையானவர்களுக்கு துறைமுகத்தில் தொழில் வழங்குவதாலும் இந்நிலை ஏற்பட்டுள்ளதாக மேலும் தெரிவித்தனர்.

# தமிழ் சாகித்திய விழா 2009!



செவ்வந்தி கலை இலக்கிய வட்டம் நாடாத்தப்படும் புவது தமிழ் சாகித்திய விழா எதிர்வரும் நவம்பர் மாதம் பதுளை மாநகரில் நடாத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டிருப்பதாக வட்டத்தின் போஷகரும் ஊவா மாகாண சபையின் உறுப்பினருமான தோழர் பி.பூமிநாதன் செஞ்சக்திக்கு தெரிவித்தார்.

பாரம்பரிய கலை,கலாசாரத்துக்கு முன்னுரிமையளிக்கும் நோக்கில் இம்முறை தமிழ் சாகித்திய விழா அமையுமெனவும் அவர் மேலும் தெறிவித்தார்.

செஞ்சக்தி

198/19 பஞ்சிகாவத்தை வீதி கொழும்பு 10 – 011-2345594 E-MAIL-niya-muwa1@sltnet.lk

THE SECRETARY B.M. BOX 4483, LONDON WCIN3XX, UK FAX: 0033148260483
P.O. BOX 194, CARNEGIE, VICTORIA 3163, AUSTRALIA, FAX: 0061 3 94369312
E-MAIL-jvp@i.bekkoame.ne.jp P www'jvpnet.com/www.jvpsrilanka.com/


# உலகத் தொழிலாளர்களே

அகில உலகத் தொழிலாளர்களே ஒன்றுபடுவீர். மார்க்ஸ் ஏங்கள்ஸ் ஆகியோரால் வெளியிடப்பட்ட கம்யூனிஸப் பிரகடனத்தில் 161 வருடங்களுக்கு முன்னர் மேற்கூறிய வாசகம் பதியப்பட்டிருக்கிறது.. அவ் வாசகத்ததை விட சிறந்ததொரு வாசகத்தை எங்கு தேடியும் கண்டுபிடிக்க முடியாது. இன்றைய தினம் மே 1ம் திகதி, தொழிலாளர் வர்க்கத்துக்கு மிக விஷேடமான நாள். சர்வதேச தொழிலாளர் தினத்தின் 123வது மே தினம் இன்று நினைவு கூரப்படுகிறது. இன்று போல், தொழிலாளர் களின் ஒற்றுமை மற்றும் தேவையை உணர்த்தும் இன்னொரு யுகத்தை கடந்த 70 வருட காலத்தில் காண முடியவில்லை.

இரண்டாவது உலக மகா யுத்தத்துக்கு பின்னர் உலகப் பொருளாதாரம் படு மோசமாக சரிந்து வருகிறது. முதலாளித்துவத்தின் வளர்ச்சியைக் காட்டிய யுகம், சோஷலிச யுகத்தை வீழ்த்தி விட்டதாக மார் தட்டிய யுகம் இன்று அதன் இறுதி மூசசைவிட்டுக் கொண்டிருக்கிறது. முதலாளித்துவ வளர்ச்சி பின்னோக்கி தள்ளப்படுகிறது. முதலாளித்துவத்தின் அனைத்து பாதுகாவலர்களும் இந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக தலையைப் பிய்த்துக் கொண்டு வழி தேடிக் கொண்டிருக்கும் நிலையில், முதலாளித்துவ உலகின் ஜாம்பாவான்கள் இஞ்சி தின்ற குரங்கு போல் விழி பிதுங்கி நிற்கின்றனர். இலட்சக் கணக்கான தொழிலாளர்கள் தமது தொழிநிலையங்களிலிருந்து தூக்கி எறியப் பட்டுக் கொண்டிருப்பதோடு, உயர்வாக வர்ணித்த நிவாரணப் பொதிகளும் காலியாகிக் கொண்டு வருகின்றன.நாளையவாழ்க்கைக்கு உறுதி கூறமுடியாத தோழிலாளர்களால் வீதிகள் நிரம்பி வழிகின்றன. ஒரு காலத்தில் 8 மணித்தியால வேலை கேட்டு போராடிய தொழிலாளர்கள், இன்று, வாரத்துக்கு 5 நாடகளாவது வேலை தரும்படி கேட்டு வீதிக்கு வந்துள்ளனர். சமூக, பொருளாதார நிலைகளில் மாற்றங்கள் நிலவிய போதிலும், தொழிலாளர்கள் மீதான ஒடுக்குமுறைக்கு எல்லையே கிடையாது. காலாவதியாகும் கம்பனிகளிலிருந்து முதலாவதாக தொழிலாளர்களே வெளியேற்றப் படுகின்றனர். ஆகக் குறைந்த நிவாரணம் பெறுபவர்களும் இந்தத் தொழிலாளர்களேயாகும்.

முதலாளித்துவத்தின் உலக மயத்தோடு வர்க்கங்கள் காலாவதியாகி விட்டதாகவும், சுரண்டல் ஒழிக்கப்பட்டு விட்டதாகவும் தொழிலாளர்களின மனதில்புகுத்தப்பட்டிருந்த கருத்து மாறி, ஏற்பட்டிருக்கும்நிகழ்வுகளுக்கேற்ப புதிய கண்ணோட்டத்தில் சிந்திக்க தொழிலாளர்களைத் தூண்டியிருக்கிறது. சர்வதேச ரீதியிலும், தேசீய ரீதியிலும் வித்தியாசமின்றி இதன் தாக்கம் தென்படுகிறது.முதலாளித்துவத்தோடு பிணைக்கப் பட்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரமும் மீளமுடியாதவாறு அழிவை நோக்கி சென்றுக் க்கொண்டிருக்கிறது. நூற்றுக் கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டு ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வீதிக்கு வீசப்படுகின்றனர். இது சர்வ சாதாரணமாக நடந்துக் கொண்டிருக்கிறது. மாய வித்தை காட்டி மக்களை ஏமாற்றி அதிகாரத்தைக் கைப்பற்றி ஆட்சிபீடமேறி, தமக்கும் தமது குடும்பத்தினருக்கும் சொத்து சேர்ப்திலேயே நாட்டம் செலுத்தி வரும் அரசாங்கமொன்று நாட்டிலிருப்பதை இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகம் பூராவுமுள்ள தொழிலாளர்கள் நன்றாகவே அறிவார்கள். உலக தொழிலாளர்களைப் போன்றே இலங்கைத்தொழிலாளர்களும் தமது வாழ்நாளில் கண்டிராத நெருக்கடிகளை வருங்காலத்தில் சந்திக்க நேரிடும்.

எனவே, இந்த நெருக்கடிகளை எதிர் கொள்ள முடியாமல் பயந்து ஒழிந்துக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கூற வரவில்லை. அதற்கெதிராகப் போராட வேண்டும். தமது தலைவிதிக்கெதிராகப் பொராட வேண்டும். எவ்வாறாயினும், ஒதுங்கி நிற்கும் மனிதர்களால் இத்தலைவிதியை மாற்றியமைக்க முடியாது. அதற்காக அனைவரோடும் சேர்ந்து துணிந்து போராட முன்வர வேண்டும். மார்க்ஸ் கூறியதைப் போன்று, தொழிலாளர்களுக்கு தளைகளைத் தவிர இழப்பதற்கு ஒன்றுமே இல்லை. அகில உலக தொழிலாளர்களே ஒன்றுபடுவீர். தெளிவான எழுத்தில் நாங்களும் இதனைக் குறித்து வைப்போம்



# நாடற்றவர் என்ற சொல்லுக்கு முற்றுப்புள்ளி

## பாராளுமன்றத்தில் இரண்டு சட்டமூலங்கள் ஏகமானதாக நிறைவேற்றம் !

கடந்த (2009) ஜனவரி மாதம் பாராளுமன்றத்தில் இரண்டு சட்ட மூலங்கள் ஏகமானதாக நிறை வேற்றப்பட்டது. அதாவது 1949ம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக தீர்க்க ப்படாது இழுபட்டு வந்த இந்திய வம்சாவழி மக்களின் பிரஜாவுரிமை பிரச்சினையாகும். அதாவது 1949 சிறிமா-சாஸ்த்திரி உடன்படிக்கை 1973 இந்திய - இலங்கை உடன்படிக்கை, 1988 /39ம் இலக்க சட்டமூலம், 2003ம் ஆண்டு 35ம் இலக்க சட்டமூலம் ஆகியவற்றின் மூலம் தீர்க்கப்படாதிருந்த நாடற்றவர்களின் பிரச்சினை ஜே.வி. பி யின் தலைமையில் 2009ம் ஆண்டு ஜனவரி 08ம் திகதி முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு இரு சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன. அவைகள் 2009ம் ஆண்டின் 6ம் இலக்க, இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்கள் ( திருத்தச்) சட்டம், 2009ம் ஆண்டின் 5ம் இலக்க நாடற்றவர்களுக்கு பிரஜாவுரிமை வழங்கள் சட்டமூலங்களாகும்.

எனவே இந்தப்பிரச்சினைக் தீர்வு கண்டபெருமை ஜே.வி.பி யையே சாரும். எப்படி இந்தப்பிரச்சினைக் ஜே.வி.பி தீர்வு கண்டது. இந்த பிரசச்சினைகளை திருத்துவதற்கான பிரதான காரணம் தற்போது இந்தியாவில் தமிழக அகதி முகாம்களில் 90ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் 28.500 பேர் பிரஜாவுரிமையற்றவர்களாகும். காரணம் 1978ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரதினால் மலையகத்தில் வாழ்ந்த இவர்கள் வடபகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தஞ்சமடைந்தனர். அதன் பீன் அங்கு ஏற்பட்ட யுத்தச்சூழல் காரணமாக 1990களில் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றனர். சுமார் 25 வருடங்களாக அங்கு அகதிகள் முகாம்களில் வசித்துவரும் இவர்கள் எதிர்கொண்ட பிரச்சினைகளில் 28.500பேரின் பிரஜாவுரிமை பிரச்சினை முதன்மைப் பெற்றது.

எமது நாட்டு தமிழ் அரசியல்வாதிகள் அனைவராலும் கைவிடப்பட்ட பிரச்சினை ஜே.வி.பி.யின் பாராளுமன்ற உறுப்பினர் தோழர் பிமல் ரத்நாயக்க, இராமலிங்கம் சந்திரசேகர் ஆகியோர் 2007ம் ஆண்டு இந்தியாவுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டுக்கு சென்ற வேலையில் அகதிகள் முகாம்களில் வாழும் மக்களை சந்தித்ததன் விளைவே இந்த இரு சட்டமூலங்களையும் திருத்தும் பணியில் சுமார் ஒரு வருடகாலமாக முயற்சித்து பாராளுமன்றத்தில் விசேட தெரிவுக்குழுவினை அமைத்து அதற்கு தலைமைத்தாங்கி இந்தப்பிரச்சினையுடன் தொடர்புடைய அனைவரையும் அழைத்து கலந்துரையாடி. அவர்கள் ஆலோசனைகளையும் பெற்று இறுதியாக 2009 ஜனவரி மாதம் 08ம் திகதி பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்பட்டு ஏகமானதாக நிறைவேற்றப்பட்டது. அதன்போது தமிழர்களுக்காக போலியாக நீலிக்கண்ணீ வடித்த தமிழ் அரசியல்வாதிகள் இந்தச்சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் தினத்தன்று அந்த விவாதத்தில் கலந்துக்கொள்ளகூட இல்லை.இதன் மூலம் தெரியவருவதாவது தமிழ் மக்களுக்காக பரிந்துபேசும் தமிழ் அரசியல் வாதிகள் வாய்மூடி இருக்கும்போது ஜே.வி. பி தனது முழுமையான பலத்தை பிரயோகித்தது மட்டுமல்ல ஜே.வி. பி மீது குத்தப்பட்டிருந்த இனவாத குற்றச்சாட்டுக்கும் நடைமுறையில் முற்றுப்புள்ளி வைத்தது. இது இந்திய வம்சாவளி மக்களுக்கு கிடைத்த வெற்றியைப்போலவே, தமிழ் நயவஞ்சக அரசியல்வாதிகளுக்கு கிடைத்த பதிலடியாகவும் அமைகிறது. அதே வேலை ஜே.வி.பி க்கு கிடைத்த வெற்றியாகவும் கணிப்பிடப்படுகிறது

தற்போது இந்தியாவில் தமிழக அகதி முகாம்களில் 90ஆயிரம் மக்கள் வாழ்கின்றார்கள். இவர்களில் 28.500 பேர் பிரஜாவுரிமையற்றவர்களாகும். காரணம் 1978ம் ஆண்டு ஏற்பட்ட இனக்கலவரதினால் மலையகத்தில் வாழ்ந்த இவர்கள் வடபகுதியில் குறிப்பாக கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் தஞ்சமடைந்தனர். அதன் பீன் அங்கு ஏற்பட்ட யுத்தச்சூழல் காரணமாக 1990களில் அகதிகளாக இந்தியாவுக்கு சென்றனர்.

www.padippakam.com



# தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்ப ஜே.வி.பியுடன் அணித்திரள்வோம்!



தற்போது LTTE யின் ஆயுதப்பிரிவு பாதுகாப்பு படையால் தோற்கடிக்கப்பட்டுள்ளது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக இலங்கையைத் துண்டாடும் பிரி வினைவாதப் போராட்டத்தை முன்னெடுத்துவந்த LTTE அமைப்பானது இலங்கைக்கு பாரிய அழிவினை ஏற்படுத்தியது.. அந்த அழிவுகளில் தமிழ் சமூகம் சொல்லொன்னாத் துயரங்களை அனுபவித்து வந்தனர் என்பதில் கருத்து வேறுபாடு கிடையாது. தமிழ் மக்களின் விடுதலைக்கென புறப்பட்ட விடுதலை போராட்டத்தால் தமிழ் மக்கள் நசுக்கப்பட்டனர்.

ஆம், வரலாற்றுத் தகவல்களைத் தேடும்போது எமக்கு கிடைக்கின்ற தமிழீழப் போராட்டமானது தமிழ் மக்களின் விடுதலைக்காக தனது கொள்கைகளைக் கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

ஆனால் தமிழ் மேட்டுக்குடியினரின் அரசியலை அவதானிக்கும்போது

> ஜே.வி.பி என்றுமே ஒரு தேசிய இனத்தை மட்டும் முதன்மைப்படுத்தி போராடவில்லை. மாறாக இலங்கையின் தேசியத்திற்காகவே போராடிவருகிறது. இலங்கையானது தமிழ் சிங்கள,முஸ்லிம், பேகர்,மலே மக்களை உள்ளடக்கி நாடாகும். அனைவருக்கும் சமத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதைவிடுத்து மக்கள் எதிர்கொண்டுள்ள சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு மஹிந்தரிடமோ அல்லது ரணிலிடமோ வேறுவிதத்தில் தீர்வு கிடையாது. அப்படியாயின் நாம் புதியதோர் பாதையை தெரிவு செய்தாக வேண்டும்.

தமிழ், சிங்கள,முஸ்லிம் மக்களை இணைத்துக்கொண்ட தேசிய ஒற்றுமையை ஏற்படுத்தும் போராட்டத்திற்குப் பதிலாக தமிழ் இனவாதத்தை அடிப்படையாகக்கொண்டு போராட்டம் முன்னெடுக்கப்பட்டதனால், இந்த இனவாதம் தமிழ் இனங்களையும் விட்டு வைக்கவில்லை. மாறாக அவர்களும் தனிநாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்தனர். அதன் விளைவாகவே கடந்த 3 தசாப்பதங்களுக்கு மேலாக ஆயுத போராட்டத்தை தமிழ் ஆயுதக்குழுக்கள் ஆரம்பத்தில் ஒன்றாக செயற்பட்டு பின்னர் சகோதரப்படுகொலை அரசியலை கட்டவிழ்த்து விட்டனர்.

சுயநிர்ணயததுக்காக முன்னெடுத்தப் போராட்டம் சுயநிர்மூலத்துக்கான போராட்டமாக மாறியது. அதன் வெளிப்பாடாக மெழெழுந்த LTTE இயக்கம் சகோதர இனங்களை அழித்தொழிப்பதை மட்டுமல்லாது தமிழ் மக்களின் தன்மானம், சுயகௌரவம், வீரம், பெருமைகளை குழிதோண்டிப் புதைத்துவிட்டு இன்று குற்றுயிறாக காலத்தின் கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

### இன்றைய தேவை!

இனவாத்தை அடிப்படையாகக்கொண்டு முன்னெடுக்கப்படுகின்ற போராட்டங்களுக்கு இலங்கையில் LTTE இயக்கம் நல்லதொர் படிப்பனையாகும். அழிவினை சந்தித்த புலிகள் இயக்கம் தமிழ் மக்களையும் அழித்தொழித்துவிட்டார்கள். அண்மைக் காலங்களில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட/படும் இராணுவ நடவடிக்கையானது தமிழ் மக்களை மீட்கும் நடவடிக்கையே என அரசாங்கம் கூறுகிறது. அரசாங்கம் அவ்வாறு கூறும் நிலைக்கு தள்ளியது யார்? என்ற கேள்வியின் போது, புலிகளைத்தவிர வேறு எவரும் இல்லை என்றே பதில் வருகிறது. ஆக மொத்தத்தில் தமிழ் மக்களை பூண்டோடு அழிக்கும் / அழித்தொழித்த சாபக்கேடு புலிகளையே சாரும். இவைகளுக்கு நல்ல உதாரணமாக வன்னியில் புலிகளின் பகுதிகள் எனக்கூறப்படும் பகுதியிலிருந்தது வரும் மக்களை பார்க்கும் போதுதான் தமிழ் மக்களின் விடுதலைக்கு போராடுவோர் அவர்களை குற்றுயிரான நிலைக்கு தள்ளியுள்ளது தெனபடுகிறது. அது மட்டுமல்லாது இன்று ஆயிரக்கணக்காக தமிழ் மக்கள் செத்து மடிந்து விட்டனர். அதன் மூலம் தமிழ் சமூகம் சகலவற்றையும் இழந்து நடுத்தெருவில் அல்லல்படும் அவல நிலைக்கும் தள்ளப்பட்டனர்.

### மஹிந்தரும் – இந்தியாவும்

கடந்த காலங்களில் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்தை நடவடிக்கைகளை உற்று நோக்கும் போது இராணுவத்திணரால் மீட்கப்படுகின்ற நிலங்களை இந்தியாவுக்கு தாரைவார்த்து வருகிறது. அண்மையில் கிழக்கு மீட்கப்பட்தன் பின்னர் தமிழர்கள் பாரம்பரியமாக வாழ்ந்த பகுதிகளான சாம்பூர், புல்மோட்டை கனியமணல், மட்டக்களப்பு மாவட்டத்தில் 900 ஏக்கர் காணி உள்ளிட்ட இலங்கை மக்களின் வளங்கள் யாவும் இந்தியாவிடம் கையளிக்கப்பட்ட கைங்கரியத்தை மஹிந்தர் அரசாங்கம் செயற்படுத்தி வருகின்றது.

அத்தோடு அல்லது 1987ம் ஆண்டு இந்தியாவினால் இலங்கை மக்களின் விருப்புக்கு மாறாக பலவந்தமாக திணிக்கப்பட்ட 13வது அரசியலமைப்பு சீர்திருத்த்திற்கு அப்பால் சென்று அதிகாரப்பகிர்வை நடைமுறைப்படுத்துவதாக மஹிந்தர் கூறுகின்றார். 13வது திருத்தத்தின் மூலம் கொண்டுவரப்பட்ட மாகாண சபையில் தமிழர்களின் அபிலாசைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா? என்ற கேள்விக்கு இல்லை என்றை பதில் வருகிறது. ஆக இலங்கைவாழ் தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்யாத மாகாணசபை, அரசியல்வாதிகள் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்து வருகிறது . லஞ்சம், ஊழல், வீண்வரையம், மோசடிகள் மலிந்த மக்கள் சொத்துகளை சூறையாடுவதற்காகவே மட்டும் போதுமான அதிரகாமிக்க அரசியலமைப்பை திணிப்பதன் மூலம் தமிழ் மக்கள் முகம்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு கான முடியாது. மாறாக பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாகி அதில் தமது அரசியல் இருப்பினை தக்கவைதது கொள்வதற்காக இந்தியாவும், மஹிந்தரும் செயற்படுகின்றனர்.

### ஜே.வி.பியும் தமிழர்களும்!

ஜே.வி.பி தொடர்பாக தமிழ் மக்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயத்தையே தமிழ் அரசியல்வாதிகளும் ஆழும் அணியும் விதைதுள்ளனர். ஆனால் ஜே.வி.பி யைப் பொறுத்தவரையில் அதற்கு இன்று 43 வயது. 43 வயதான தனது வரலாற்றில் இருதடவை மக்களை சுரண்டும் முதலாளித்துவ அரசாங்கத்தை வீழ்த்திவிட்டு சமவுடைமை சமுதாயத்தை உருவாக்குவதற்காக ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்தது. அப்போராட்டத்தில் ஜே.வி.பி யின் ஸ்தாபகர் தோழர் ரோஹன விஜேவீர உள்ளிட்ட ஜே.வி.பி யின் முக்கிய தலைவர்கள், தொண்டர்கள் அப்போதைய அரசாங்கத்தால் ஆயிரக்கணக்கில் படுகொலை செய்யப்பட்டு, பல ஆயிரக்கணக்கானவர்கள் சிறையிலிடப்பட்டதன் பின் ஆட்டம் முடிந்துவிட்டதென அன்றைய ஆட்சியாளர்கள் கூக்குரலிட்டு குதுகலித்தனர்.

அப்படியான தீர்மானகரமான போராட்டத்தின் போது ஒரு தமிழ் குடிமகனையாவது தமிழன் என்ற காரணத்தினால் இனவாத அடிப்படையில் அவர்களது நகத்திற்காவது தீங்கு விளைவித்ததா? இல்லை. வரலாற்றில் அப்படியான ஒரு சம்பவம்கூட கிடையாது. அதே பாணியில்தான் இன்றும் தனது கொள்கைகளை ஜே.வி.பி முன்னெடுக்கிறது.

ஜே.வி.பி என்றுமே ஒரு தேசிய இனத்தை மட்டும் முதன்மைப்படுத்தி போராடவில்லை. மாறாக இலங்கையின் தேசியத்திற்காகவே போராடிவருகிறது. இலங்கையானது தமிழ் சிங்கள,முஸ்லிம், பேகர்,மலே மக்களை உள்ளடக்கிய நாடாகும். அனைவருக்கும் சமத்துவத்தின் அடிப்படையில் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும். அதைவிடுத்து மக்கள் எதிர்கொண்டுள்ள சமூக, பொருளாதார பிரச்சினைகளுக்கு மஹிந்தரிடமோ அல்லது ரணிலிடமோ வேறுவிதத்தில் தீர்வு கிடையாது. அப்படியாயின் நாம் புதியதோர் பாதையை தெரிவு செய்தாக வேண்டும். ஆம், பச்சைக்குப் பதிலாக நீலத்தை நீலத்துக்குப் பதிலாக பச்சையை ஆட்சிபீடமேற்றியதன் விளைவே இன்றுமுழு நாடும் அபாய நிலையை எதிர்கொண்டுள்ளது.

எதிர்காலத்தில் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து மக்கள் மேலும் நெருக்கடியை எதிர்நோக்கும் நிலையே கானப்படுகிறது. மறுபுறத்தில் இந்த நிலைமையை பயன்படுத்தி அந்நிய நாடுகளின் தலையீடு அதிகரிப்பதற்கும் மேலும் எமது நாட்டை படு பாதாளத்தில் வீழ்த்துவதற்குமான நடவடிக்கைகளே தென்படுகிறது.

ஆகவே இந்த நிலையிலிருந்து எமது நாட்டை மீட்டெடுக்க இலங்கைவாழ் மக்கள் ஓரணியில் அணித்திரண்டாக வேண்டும். அதற்கான சரியான தலைமைத்துவம் ஜே.வி.பியே யாகும்.குறிப்பாக தமிழர்கள் தற்போது எதிர்கொண்டுள்ள அவலநிலையிலிருந்து மீள புதிய பாதையினை தெரிவு செய்தாக வேண்டும். அதே போல் தமிழ் மக்களுக்காக தமது இருப்புக்காகவும் .பதவிகளுக்காகவும் நீலிக்கண்ணீரவடிக்கும் இது நாள்வரை மக்கள் மீது கஷ்டங்களை சுமத்திய தமிழ் அரசியல்வாதிகளை நிராகரித்துவிட்டு, இன்று உண்மையில் உண்மையான தேசிய விடுதலை போராட்டத்திற்கு தலைமைத்தாங்கும், அதற்கானஅர்ப்பணிப்பு, தியாகம் செய்த/செய்யும் ஜே.வி.பி யோடு அணித்திரள்வதாகும். அவ்வாறு அணித்திரள்வதன் மூலம் உண்மையான தேசிய விடுதலையை வென்றெடுக்க முடியும். அதற்கான காலம் கனிந்துவிட்டது,

படிப்பகம்

www.padippakam.com




# மலைக்குரல்



## தேயிலைத் தொழிற்சாலைகளுக்கு மூடுவிழா!

மூடப்பட்ட தொழிற்சாலைகள் ஏலத்தில்! பாரம்பரிய தொழிற்சங்கங்கள் மௌனம்! தோட்டத் தொழில் துறையை பாதுகாக்க அணித்திரளுமாறு அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம் அறைகூவல் !


TIMES Online
3 tea factories of Maskeliya Plantations on sale
2009-03-11 15:51:51
Maskeliya Plantations PLC has advertised three of its tea factories for sale, brokers said on Wednesday.
In a newspaper advertisement on March 11, the company called for offers for the sale of Mahakanda factory of Ampitikanda Estate, Bandarawela. Ferham factory of Ferham Estate, Talawakelle and Maskeliya factory of Glentilt Estate, Maskeliya. These plantations come under the Richard Peiris Group.
-Ends-

மஸ்கெலியா பிளாண்டேசன் ரிச் சர்ட்பீரிஸ் நிருவனத்தின் கீழ் இயங்கிவரும் கொஸ்லந்தை தோட்ட தேயிலைத் தொழிற் சாலை கடந்த மார்ச் மாதம் மூடப்பட்டது. அம்பரகலை, மக்கள் தெனிய, மீரியபத்த, எஸ். கே ஆகிய பிரிவுக-ளில் சுமார் 400க்கும் அதி மான தொழிலாளர்கள் இருக்கின்றார்கள். தேயிலை உற்பத்திக்குறைவு, நட்டம் என்ப வற்றை காரணம் காட்டியே இந்த தேயிலை தொழிற்சாலை மூடப் பட்டுள்ளதாக தெறியவருகிறது. அதனால் அத்தொழிற்சாலையில் தொழில்புரிந்த பல தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.இது போன்ற பல நொண்டிச்சாட்டுக்களைக் கார ணங்காட்டி இதுவரை பதுளை மாவட் டத்தில் 13க்கும் அதிகமான தேயிலை தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளது



குறிப்பிடத்தக்கது.
அத்துடன் மஸ்கெலியா பிளாண்டேசன் நிர்வாகத்தின் கீழ்இயங்கும் அம்பி ட்டிகந்த மாக்கந்த தேயிலைத் தொழிற்சாலை உட்பட நுவரெலியா மாவ ட்டத்திலுள்ள மஸ்கெலியா கிளன்டீல் ,மஸ்கெலியா, தலவாக்களை, பாம் தோட்ட தொழிற்சாலைகளை ஏலத்தில் விற்பதற்கான சகல நடவடி க்கைகளும் முன்னெடுக்கப்பட்டு அதற்கான பத்தி ரிகை விளம்பரமும் கடந்த மார்ச் 11ம் திகதி SUNDAY TIMES பத்திரிகையில் பிரசுரமாகியிருந்தது குறிப்பிடத்தக்கது.

## தோட்ட உத்தியோகஸ்தர்களுக்கு காணி வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

**ஊவா மாகாணசபையில் தோழர் பீ.பூமிநாதன்**

தோட்டத் தொழிலாளர்களைப் போலவே தோட்டத் துறையில் உத்தியோகம் புரியும் உத்தியோகஸ்தர்களும் தெருவில் விடப்பட்டுள்ளார்கள் என்று ஊவா மாகாணசபை மக்கள் விடுதலை முன்னணியின் உறுப்பினர் தோழர் பீ. பூமிநாதன் 2009.03.25 ஊவா மகாணசபையில் பிரேரணையொன்றை முன்வைத்து உரையாற்றினார்.
அவர் மேலும் கூறுகையில் காலம் காலமாக தோட்டத்துறைக்கு பெரும் சேவையாற்றிய அவர்கள் தாம் ஓய்வு பெரும் தருவாயில் குறிப்பாக தோட்டத்தில் குடியிருக்கும் உரிமையையும் இழந்து விடுகின்றார்கள்.
இது தொடர்பாக ஆராய்ந்து அவர்களுக்கு வீட்டுரிமை மற்றும் காணி உரிமைகளை உறுதிப்படுத்த வேண்டும்.
தோட்டத் துறைக்காக தமத வாழ்நாளில் அரைவாசியை அர்ப்பணித்த அவர்கள் ஓய்வு பெற்று செல்லும் போது எவ்வதமான உரிமையும் அற்றவர்களாக வீசியெறியப்படுகிறார்கள். எனவே அரசாங்கமும். தோட்ட நிர்வாகமும். பெருந்தோட்ட அமைச்சும் அவர்கள் நலனில் அக்கறைக்கொண்டு உடனடியாக ஓய்வு பெற்று செல்லும் உத்தியோகஸ்தர்களுக்கு வீட்டு உரிமையையும், காணி உரிமையையும் வழங்க வேண்டுமென குறிப்பிட்ட அவர் அது தொடர்பான கடிதங்களை ஜனாதிபதி, காணிசீர்திருத்தசபை காணி அமைச்சு என்பவற்றிற்கு அனுப்பிவைத்துள்ளார்.



## தோட்டப்புற வைத்தியசாலைகளில் மருந்து தட்டுப்பாடு!

**கவனிப்பாரா சுகாதார அமைச்சர்?**



பெருந்தோட்டங்களில் உளள வைத்திய சாலைகளில் மற்றும் மருந்துச்சாலைகளில் மருந்து தட்டப்பாடு பெரும-ளவில் நிலவுவதாக தெரியவருகிறது. 2005ம் ஆண்டு தோட்ட வைத்திய அனைத்தையும் அரசாங்கம் பொறுப்பேற்று மறுசீரமைத்து தோட்ட மக்களுக:கு வைத்திய சேவை விஸ்த்தரிக்கப்படும் என்னும் தொனிப்பொருள் மயானத்தை நோக்கி சென்று விட்டதாக தோட்ட மக்கள் தெரிவிக்கிறார்கள்.
குறிப்பாக பதுளை,நுவரெலியா மாவட்டங்களில் உள்ள தோட்டப்புற வைத்திய சாலைகளை தொடராக அவதானித்தால் புனர்நிர்மானம் என்னும் பெயரில் மூடப்பட்டுள்ளதுடன் இயங்கிக்கொண்டிருக்கும் மருந்துச்சாலைகளில் பெரசிட்டமோல்,பிகோ வில்லைகளைத்தவிர வேறு மருந்துகள் இல்லாத நிலையி-லேயே கானப்படுகிறது.

## ஊவா மாகாணசபை தேர்தலின் பின்

### மூடப்படும் நிலையில் பல தோட்டப்பகுதி தமிழ் பாடசாலைகள்!

தோட்டப்பகுதி தமிழ் பாடசாலைகள் எதிர்காலத்தில் மூடப்படும் அபாயம் தென்படுவதாக கடந்த மார்ச் மாத செஞ்சக்தியில் எழுதியிருந்தோம். அது போலவே மேல் மாகாணத்தில் சுமார் 30க்கும் மேற்பட்ட பாடசாலை-லகள் மூடப்படும் நிலையில் உள்ளதாக தெரியவருகிறது. மூடுவதற்கு அடை-டயாளமாக அரசாங்கம் ஆசிரியர்கள், தளவாடங்கள் ஏனைய வசதிகள் அனைத்தையும் சுருக்கியிருக்கிறது. அதே போல் ஊவா மாகாணத்தில் குடும்ப பாடசாலைகள் என்னும் போர் வையில் 50 மாணவர்களுக்கு குறவா கவுள்ள தமிழ் பாடசாலைகள் மூடப் படவுள்ளதுடன் 100 மாணவர்கள் கல்வி கற்கும் சிலபாடசாலைகளின் பெயர் களும் கல்வித் திணைக்களத்தால் திரட் டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

அத்துடன் ஊவா மாகாணத்தில் 170 தமிழ் பாடசாலைகள் இருக்கி ன்றபோ திலும் ஆசிரியர்களுக்கான பாடத்திட்ட ஆலோசகர்கள் 319 பேர் இருக்கின் றார்கள் . ஆனால் தமிழ் மொழி ஆலோச கர்கள் 24 பேர் மட்டுமே இருக்கின்றார்கள் கணிதம் 01, ஆங்கிலம் 02, தமிழ் இரண்டாம் மொழி 03, சமூகவியல் 02, வர்த்தகம் 01, ஆரம்பகல்வி 07, தமிழ் மொழி 0, விஞ்ஞானம் 0, சமயம் 03 என்ற அடிப்படையிலேயே உள்ளனர். தமிழ் மொழியை பாதுகாக்கின்றோம் என்று ஊவா மகாணசபையில் வாய்சவடால் விடும் மலையக மந்திரிகள் இக்குறை பாட்டைக் கண்டுகொள்வதில்லை. சிங்கள மொழியில் 319 பேர் இருக்கும் நிலையில் தமிழ் மொழியில் 24 பேர் இருப்பது தமிழ் பாடசாலைகள் மூடுவத ற்கான சிறந்த உதாரணமாகும்.

## தோட்டத் தொழிலாளர்களுக்கு சம்பளஉயர்வு!

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் அசமந்த போக்கு காட்டிவரும் கம்பனிகள் கூட்டுக்கமிட்டியில் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு முடிவுக்கு வராத நிலையே காணப்படுகிறது.
கூட்டுக்கமிட்டியும், கம்பனிகளும் ஏமாற்றும் நேரத்தில் அரசாங்கமும் சம்பள உயர்வு விடயத்தில் அமைதி காத்து 20 கம்பனிகள் நட்டத்தில் இயங்குவதாக கூறுகிறது. வாழ்க்கை சுமை அதிகரித்துள்ள நிலையில் அரசாங்கமும் தொழிலாளர்கள் காதில் பூ வைக்கிறது.
கூட்டு கமிட்டியில் அங்கம் வகிக்கும் C.W.C,L.G.E.W.U , கூட்டுதொழிற்சங்கம் மற்றும் அரசாங்கத்துடன் அமைச்சுப்பதவி வகிக்கும் தொழிற்சங்கங்கள் என்பனவும் தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் கண்டும் கானாதது போல் செயல்படுகிறது.
தோட்டத்தொழிலாளர்களுக்குமானியம்,பொதிஎன்பனதருவதாகவாக்குறுதியளித்த அரசாங்கம் எதையுமே இதுவரை நடைமுறைப்படுத்தாதது குறிப்பிடதக்கது.

## பெருந்தோட்டங்களை விற்பதற்கான நடவடிக்கை!



20 தோட்டக்கம்பனிகள் நட்டத்தில் இயங்குவதாக கூறும் அரசாங்கம் தோட்டங்களை சிறுமுதலாளிகளுக்கு விற்பதற்கு முயன்றுவருவதாக தெரிகிறது. இது தொடர்பாக காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவின் காணி தொடர்பில் ஆராய்வதற்கான அமைச்சரவை உப-குழுவின் தலைவரும் அமைச்சருமான டியூ. குணசேகர அவர்கள் நாட்டில் சிறு தேயிலை உற்பத்தியாளர்கள் 76 வீத பங்களிப்பை வழங்குகின்ற நிலையில் அவர்களுக்கு இதனைப்பகிர்ந்து கொடுப்பதன் மூலம் இலாபமீட்ட முடியுமென தெரிவித்ததுடன் கம்பனிகளிடம் உள்ள கானிகளின் விபரத்தை ஆராய்வதுடன் கானிகளை அளவிடுவதற்கான ஆலோசனைகளையும் அரசுக்கு வழங்கியுள்ளதாக மார்ச் 18ம் திகதி ஜனாதிபதிக்கு சமர்பித்த அறிக்கை தொடர்பில் நடத்திய ஊடகவிலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

படிப்பகம்

www.padippakam.com



# சொற்களைவிட
# பே



தொழிலாளர்கள் சோசலிசத்துக்கு துரோகம் செய்வதில்லை. முதலாளிகளுக்கு அளிக்கும் லாபத்திற்கு பரிவர்தனையாக தொழிலாளர்களில் ஒரு பகுதியினர்க்கு சாதகங்களைப் பெருவோரே சோசலிசத்திற்கு துரோகம் செய்யும் பேர்வளிகள்.

— லெனின்

இம்முறை உலகவாழ் தொழிலாள வர்க்கம் எதிர்கொண்டிருக்கும் பல்வேறு சவால்கள் நிறைந்த நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே மே தினம் உதயமாகிறது. உலகமுழுவதிலும் தொழிற்சாலைகள் மூடப்பட்டு பல இலட்சக்கணக்கில் தொழிலாளர்கள் வேலையில் இருந்து நீக்கப்பட்டு, ஊதியம் வெட்டப்பட்டு, தொழிலாளர் உரிமைகள் பறிக்கப்பட்டு தொழிலாளர் போராட்டம் காட்டுத்தீயாக பரவிவரும் காலகட்டத்தில்தான் இம்முறை மே தினம் நினைவு கூரப்படுகிறது.

மே தினம் என்பது உலகம் முழுவதும் பரந்துவாழும் உழைக்கும் மக்கள் கொடிய ஆட்சியாளர்களுக்கு எதிராக பே- ாராடி இரத்தம் சிந்தி உயிர்நீர்த்து உரிமையை வென்றெடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க நாளாகும்.இம்முறை நினைவு கூரப்படுவது 119வது மே தினமாகும்.

தனியார்துறை ஊழியர் 50000 க்கு அதிகமானோர் தொழில் இழந்தும் தொழிற்சாலைகள் மூடப்பட்டும் தொழிலாளர்களின் உரிமைகளைப்பறிப்பதற்கு ஏதுவான விசேட சட்டத்திட்டங்கள் ஆட்சியாளர்களால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கும் இவ்வேளையில் இலங்கைவாழ் உழைக்கும் மக்கள் மே தினத்தை பலத்த சவால்களுக்கு மத்தியிலேயே நினைவு கூருகின்றனர்.

பல பேர் வேடதாரிகளால் அர்த்தம் பொய்ந்த மே தினத்தை சீரழிக்கின்ற இந்நாட்டு ஆளும் வர்க்கத்தின் பகடைக்காய்



எதிர்கொள்வதற்கும் பயிற்சியைப் பெற்றுக்கொள்ள பயன்மிக்கதாகும். இற்றைக்கு 123 வருடங்களுக்கு முன்னர் 1886ம் ஆண்டு மே முதல-

உழைக்கும் மக்களுக்கு தமது அன்றாட வயிற்றை நிரப்ப முடியாத நிலையில் 12 முதல் 16 மணித்தியாலங்கள் வரையில் தொழிற்சாலைகளில் தமது உழைப்பை

## தேசிய தொழிற்சங்க மத்திய நிலையத்தின் தலைவர் தோழர் லால் காந்த பா-உ



இன்று இலங்கை வாழ உழைக்கும் மக்கள் இரண்டு சவால்களை எதிர்கொண்டுள்ளனர். ஒன்று உரிமைகளை வெல்வது, வென்ற உரிமைகளை பாதுகாப்பது.இது சமூக பொருளாதார துை- றகளையும் உள்ளடக்கும். அடுத்த சவால் பிரிவினைவாத, இனவாத,பயங்கரவாதத்தை தோற்கடிப்பதாகும். போராட்டத்தின் அண்மைய காலங்களில் தொழிலாளர்கள் செய்த அர்ப்பணிப்புகளால் பற்றி பல வெற்றிகளை நாம் அடைந்துள்ளோம். ஆனால் தொழிலாள வர்க்கத்தக்கு அத்தோடு நிற்க முடியாது தமது வர்க்கத்தின் உரிமகளுக்காக போராடுகின்ற அதே வேளை நாட்டை பிரிக்கும் பிரிவினைவாத செயற்படுகளுக்கு எதிராகவும் போராட வேண்டும். இதன்போது தமிழ், சிங்கள, முஸ்லிம் என்ற பேதமின்றி தொழிலாளர் வர்க்கமாக ஒன்றுபட வேண்டும். அதேபோல் அரசு. தனியார், தோட்டங்கள என்று பாராமல் பேதமின்றி ஒரே கொடியின்கீழ் கீழ் அணித்திரண்டு புதிய சவால்களை வென்றெடுக்க முன்வர வேண்டும்.

அதற்கான சரியான தலைமைத்துவத்தின் கீழ் அணித்திரண்டு நாளைய உலகத்தின வெற்றிக்காக போராட முன்வரவேண்டும் அப்போதுதான் தொழிலாள வர்க்கத்துக்கு சொந்தமான மே திதினம் கொண்டாடுவது அர்த்தம் நிறைந்ததாகும்.

நகர்த்தலின் முன்னால் மே தினத்தின் உண்மையான மகிமையும் அதன் வரலாற்றுத் தோற்றத்தினையும் மீள நினைவு கூருவதானது நம் நாட்டு உழைக்கும் மக்களின் எதிர்கால போராட்டப்பாதைக்கு முன்னோடித்தத்துவத்தை புரிந்து கொள்வதற்கும் கொடிய சவால்களை

ாம் திகதி எட்டு மணிநேர வேலை நேரக் கோரிக்கையை முன்வைத்து அமெரிக்காவின் சிக்காகோ நகரத்தில் மாபெரும் வேலை நிறுத்தப் போராட்டம் தீயாக பரவியது.அன்று இருந்த நிலைமைகளின் கீழ் உழைக்கும் மக்கள் ஓரணியில் நின்று போராடினர். அப்போது முதலாளித்துவம் தோற்றம் 300 ஆண்டுகள் கடந்திருந்த போதிலும்

விற்கவேண்டியிருந்தது.

முதலாளித்துவம் முதலில் தோன்றிய ஜெர்மன், பிரித்தானியா, பிரான்ஸ் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுக- ளில் பின்னர் அமெரிக்காவில் தோன்றிய போலவே தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக பல தசாப்த காலமாக கடுமையான சில சந்தர்ப்பங்களில் கொடூரமான பல

www.padippakam.com



# மௌனம் மேலோங்கிய
# 0 தினம்

போராட்டங்களில் ஈடுபட நேரிட்டது. தொழிலாள வர்க்கம் ஸ்தாபனப்பட வேண்டமென்ற கருத்து இந்த நிலைமைகளின் மத்தியிலேயே தோன்றியது. தொழிலாள வர்க்கம் கடுமையான நிபந்தனைகளின் கீழ் போராடிய போதும் அந்த நிலைமைகளிலும் அவர்கள் போராட்டத்தை கைவிடாது போராட்டங்களை மென்மேலும் மெருகூட்டினார்களே தவிர அவர்கள் போராட்டத்தை கைவிட்டு ஓடவில்லை.

1886 மே முதலாம் திகதி அமெரிக்காவில் சிக்காகோ நகரத் தொழிலாளர்கள் 08 மணிநேர வேலை நாள் கோரிக்கையை முன்வைத்து போராடிய போது வேலை நிறுத்தம் செய்த தொழிலாள வர்க்கத்தின் வரலாற்றில் அப்போராட்டம் தீர்மானகரமாக அமைந்தது. அப்போராட்டம் அமெரிக் தொழிலாளர்களுக்கு மட்டுமன்றி உலகம் வாழ் தொழிலாளர்களுக்காக தோற்றம் பெற்ற மிகப்பெரிய வர்க்கப் போராட்டமாகும்.

இன்று மே தினத்தை நினைவு கூராத நாடுகளே கிடையாது. உலக வாழ் உழைக்கும் மக்கள் ஜாதி, மத, இன பேதங்களின்றி ஐக்கியத்துடன் நினைவு கூரும் நாள் உலக தொழிலாளர் தினமாகிய மே தினமேயாகும்.

அன்று மே தினத்தை நினைவு கூர்ந்தோர் இடதுசாரிகள், கம்யூனிஸ வாதிகள் மற்றும் அவர்களின் தலைமையில் இயங்கிய தொழிற்சங்கங்கள் மட்டுமேயாகும்.

முதலாளித்துவ வர்க்கத்துக்கு எதிராக எழுச்சிப்பெற்ற போராட்டங்களினால் தோற்றம் பெற்ற உலக தொழிலாளர் தினத்தை இன்று முதலாளித்து அரசியல் கட்சிகளும் நினைவு கூருகின்றனர். இதன் மூலம் வெளிப்படும் செய்தி தொழிலாளர் வர்க்க சக்திகளின் முன்னால் தமது வர்க்கத்தின் உண்மைத்தன்மையை மூடிமறைப்பதற்கு தொழிலாளர் வர்க்கத்தை ஏமாற்றுவதற்கான மானங்கெட்ட முயற்சியேயாகும்.

மே தினத்தை நினைவு கூருவது உழைப்பை விற்று தமது வாழ்வின் நிலைத்தலை கொண்டுள்ள தொழிலாள வர்க்கத்தின் தலையாய கடைமைப்பொறுப்பாகும். அதை ஆழும் வர்க்கத்தால் சீரழிக்க விடாது பாதுகாப்பதும் அவர்களது பொருப்பாகும்.

இம்முறை மே தினத்தை நினைவு கூரும் தொழிலாள வர்க்கத்தின் பிரதான சவாலாகவிருப்பது இத்தினத்தை மதலாளித்துவ ஆட்சியாளர்களிடமிருந்த விடுவித்து கொள்வதாகும். அதுவே தமது பொறுப்பென உலகத்துக்கு பறைசாற்றி உறுதிப்படுத்துவதாகும். உலகின் முதலாவது வர்க்க எழுச்சியாக கொள்ளப்படும் 1871 பாரிஸ் கம்யூனின் தோழ்வின் பின்னர் தொழிலாளர் வர்க்க இயக்கம் தவறுகளை நிவர்த்தி செய்து சரியான பாதையில் வழிநடத்துவதற்கு மார்க்ஸ், ஏங்கள்ஸ் மேற்கொண்ட முயற்சி அன்று தோல்வியில் பின் வாங்கியிருந்த உலக தொழிலாள வர்க்கத்துக்கு வலிமை சேர்த்தது 1886 மே போராட்டமாகும்.

சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இரண்டாம அகிலத்தில் முதலாவது மாநாடு 1889 பாரிஸ் நகரில் நடைபெற்றது. மாநாட்டு நிகழ்ச்சி நிரலில் விரிவாக ஆராயப்பட்ட விடயமானது 1886 மே போராட்டத்தை 1890 மே முதலாம் திகதி முதல் உலக பாட்டாளி வர்க தினமாக் நினைவு கூறப்பட வேண்டுமெனமுன்மொழியப்பட்ட பிரேரணை ஏகமானதாக மாநாடு அங்கிகரித்தது. இப்பிரேரணைக்கு ஏற்ப உலக தொழிலாளர் தினம் 1890 மே 01ம் திகதி ஆரம்பமானது. இந்நாள் இப்போது மே தினமாகும். இப்பிரேரணையை செயற்படுத்தும் போது மே 01 ம் திகதி உழைக்கும் தினம் என்றால் அத்தினத்தில் உரிய நாட்டுத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டுமென முடிவுசெய்யப்பட்டது.

அன்று ஜெர்மனி சமூக ஜனநாயக கட்சியின் வேண்டுதலுக்கு ஏற்ப மே தினம் வேலை நாளை முடித்த பின் நேரத்திலேயே நடத்தப்பட்டது. பிரித்தானிய தொழிலாளர்கள் அதை ஆரம்பித்தது மே மாதம் 01ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்றாகும். சர்வதேச கம்யூனிஜ்ட இயக்கத்தில் ஸ்தாபகர்களில் ஒருவரான பெத்ரிக் ஏங்கள்ஸ் லண்டன் நகரில் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் கலந்துக்கொண்டனர். அதில் மூன்று இலட்சத்துக்கு அதிகமான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

1893ல் நடைபெற்ற இரண்டாவது அகிலததில் மூன்றாவது மாநாட்டில் ஏங்கள்ஸ் அவர்ககள் விசேட பிரேரணையொன்றை கொண்டுவந்த நிறைவேற்றப்பட்டது.

அதாவது மே தினம் எட்டுமணிநேர வேலை நாளுக்கு மட்டுமல்ல சமூக மாற்றத்திற்கான போராட்ட நாளாக விரிவுபடுத்துவதற்கு நாளாக மாற்ற வேண்டுமென்ற பிரேரணைக்கான ஏற்ப முடிவு செய்யப்பட்டது.

1886ம் ஆண்டிலிருந்து எடுத்துக்கொண்டால் இன்று நடத்தப்படுவது 123 வது மே தினமென்றதாலும் 1890 மே 01ம் திகதி [illegible] தினத்தை நினைவு கூரும் பிரேரணை நிறைவேற்றப்பட்டதனால் அன்றைய நாள் முதல் மே தினத்தை ஆரம்பமாக கொள்ளப்படுகிறது. அதற்கிணங்க இம்முறை நினைவு கூரப்படுவது 119 வது மே தினம்.

1870 காலப்பகுதியிலிருந்து பாட்டாளி வர்க்க இயக்கத்துக்கு புதியதோர் பாதைக்கு பிரவேசித்தது. அது நாள்வரை வேலை நிறுத்தமானது தொழிழாளர்களின் தாங்கிக்கொள்ள முடியாதளவு நெருக்கடி மிகுந்த நிலைமையின் போதாகும். ஆயினும் வேலை நிறுத்தம் தொடர்ச்சியாக, பல்வேறு துறைகளுக்கு அது பொருத்தமற்றதாக அமைந்தது.

இக்காகட்டத்திலேயே இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் கலந்தக்கொண்ட வேலை நிறுத்தம் பிரித்தானியாவில், பிரான்ஸில், ஜெர்மன் மற்றும் அமெரிக்காவிலும் தோன்றியது.

1875 பென்சில்வேனியாவில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆட்சியாளர்களின் அடக்குமுறைக்கு கட்டவிழத்துவிடப்பட்டு காடையர்களைக் கொண்டு அடக்கு முறைச் செய்யப்பட்டது. பல தொழிலாளர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 19 தொழிலாளர் தலைவர்கள் மீது பொய்குற்றச்சாட்டை சுமத்தி நிதிமன்றத்தினால் மரண தண்டனை வழங்கப்பட்டது. இந்த தொழிலாள போராட்டத்தின் மத்தியில் தீரமான போராட்டம் 1886ல் அமெரிக்க சிக்காகோ நகரில் நடைபெற்ற பாட்டாளி வர்க்க போராட்டமாகும்.

1886 ம் ஆண்டு அமெரிக்காவில் நிவ்யொர்க் முதல் சன்பிரான்ஸிகோ வரையில் ஒரு வருடமாக தொடர்ந்த வேலை நிறுத்தப் போராட்டம், ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அவர்களின் பிரதான கோரிக்கை 8 மணி நேர வேலை நாளாகும். இப்போராட்டத்தில் மையமாக இருந்தது சிக்காகோ நகரமாகும்.

1886 மே 01ம் திகதி சிக்காகோ நகரத்து வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட 40, 000ஆயிரம் தொழிலாளர்கள் நிரம்பியிருந்தனர். அக்காலத்தில் 40,000 பெரைக் கொண்ட ஊர்வலம், ஆர்ப்பாட்டம் செல்வதென்பது ஆச்சரியமிகு புதுமை நிறைந்த விடயமாகும். ஊர்வலம் அந்த ஊர்வலம் மே 2-3ம் திகதிகளிலும் நடைபெற்றது.

சிக்காக்கோ நகரத்தில் மெக்கோர்மிக் (mac cormick) தொழிற்சாலையில் வேலை நிறுத்தத்தை காடையர்களைப் பயன்படுத்தி சிதைப்பதற்கு ஆட்சியாளர்கள் செயற்பட்டனர்.. அதன்போது தொழிலாளர்களும் காடையர்களுக்குமிடையே கலகம் ஏற்பட்டது. அந்த கலகத்தைக் காரணமாகக்கொண்டு மே 03ம் தி-

11 பக்கம்..

## அகில இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கம்

### தலைவர் தோழர் இராமலிங்கம் சந்திரசேகர்



இலங்கை வாழ் பாட்டாளி வர்க்கம் பாரிய சவாலகளை எதிர்கொண்டுள்ளனர். இன்று ஏற்பட்டுள்ள முதலாளித்துவ பொருளாதார நெருககடியால் உலக வாழ் உழைப்பாளிகள்தங்களது தொழிலுக்கான உரிமைகளை அனைத்தும் பறிகொடுக்கும் அபாயகரமான நிலை கானப்படுகிறது.

அதே போல் தோட்டத தொழிலாளர்களும் இந்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள் பொருளாதார ரீதியில் மிகவும் பின் தள்ளப்பட்ட தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை என்றோஇழந்து விட்டனர். முதலாளிதுவதொழிற்சங்கங்களின் வழிநடத்துதலின் பின் புலத்தில் அவர்களுக்கான உரிமைப்போராட்டம் மறுக்கப்பட்டும், மறைக்கப்பட்டும் வந்ததே வரலாறு

அதே நிலைதான் இன்னும், ஒரு புறம் முதலாளித்துவ தொழிற்சங்கங்கள் பேரம் பேசும் முதல் பனிகளில் நின்று தோட்டத் தொழிலாளர்களின் எழும்பை முறிக்க முயல்கிறது.

இச்சந்தர்ப்பத்தில்தான் தோட்டத் தொழிலாளர்கள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்காக முதலாளித்துவ தொழிற்சங்க முகாம்களில் இருந்து விடுபட்டு உண்மையான பாட்டாளிவர்க்கத்துடன் அணித்திரண்டு உரிமைப் போராட்டத்தில் ஒன்றினைய வேண்டும். அதற்கான தருனம் தற்போது கிடைத்திருக்கிறது.

உழைக்கும் வர்க்கத்திற்கு சொந்தமான மே தினம் பாட்டாளிகளின் போராட்டத்தை முன்னிலைப்படுத்தியிருப்பதோடு, அது உலக முதலாளித்துவ ஏகாதிபத்தியவாதிகளையும் ஒரு கனம் சிந்திக்க வைத்திருக்கிறது இந்த நன்நாளில் புதியதோர் பயணத்தை ஆரம்பிப்போம். அதற்காக அணித்திரள்வோம்.

# அரசாங்கம் யுத்தத்தை ஏலம் விட்டதை மக்கள் அறிவார்கள்!

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ச அமரசிங்க அவர்கள் செஞ்சக்திக்கு வழங்கிய செவ்வி**



கேள்வி :- மேல் மாகாண தேர்தல் முடிவுகள் குறித்த உங்களது கணிப்பீடு என்ன?

பதில் :- இதுவரை நடத்தப்பட்ட மாகாண சபை தேர்தல்களைப் போன்றே, மேல் மாகாண சபை தேர்தலிலும், பயங்கரவாதத்துக்கெதிராக பாதுகாப்பு படையினரின் நடவடிக்கைக்கான மக்கள் கருத்துக் கனிப்பாக, இந்தத் தேர்தலில் வாக்களிக்குமாறு அரசாங்கம் மக்களைக் கேட்டுக் கொண்டது. மாகாண சபைகளினால் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களைப் பற்றியோ, மேற்கொள்ளப்பட்டிருக்கும் திட்டங்கள் குறித்தோ இத்தேர்தலினபோது விவாதிக்கப்படவில்லை.

ஜனாதிபதி உள்ளிட்ட கூட்டமைப்பு அரசாங்கத்தின் அனைவரும் தேர்தல் களத்தில் காலம் பூராவும் மக்கள் மனதில் வடமுனை யுத்த வெற்றிகளைப் பற்றிய போதையேற்றினர். இத்தேவைக்காக அரச ஊடகங்கள் முற்று முழுதாகப் பயன்படுத்தப்பட்டன. அரச ஊடகங்கள் அரசாங்கத்தின் ஊது குழலாகவே பயன்படுத்தப்பட்டன. தேர்தல் நடைபெற்ற 25ம் திகதி கூட அரசாங்கத்துக்கு வக்காலத்து வாங்கும் செயலில் அரச ஊடகங்கள் ஈடுபட்டிருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

சுதந்திர தேர்தல் ஆணையம், சுதந்திர பொலிஸ் ஆணையம், ஆகியன செயற்படவில்லை. அரசாங்கம் கொலைச் செயல்களில் ஈடுபட்டது. எமது நந்தன பாலகே தோழர் படுகொலை செய்யப்பட்டார். எமது தோழர்கள் அச்சுறுத்தப்பட்டனர் தாக்கப்பட்டனர். பொதுவாகப் பார்த்தால் மேல் மாகாண சபைத் தேர்தல் நீதியானதாக இருக்கவில்லை.

வடமேல் மற்றும் மத்திய மாகாணச் சபை தேர்தல்களை விட, அரசாங்கத்துக்குக் கிடைத்த வாக்கு வீதம் குறைவானதாகவே இருந்தது. மாகாணத்தின் மொத்த வாக்குகளில் 45% அரசாங்கத்துக்குக் கிடைத்திருந்தது.

அரசாங்க யுத்தத்தை ஏலம் விட்டதை மக்கள் அறிவார்கள். மக்கள் விரக்தியடைந்துள்ளனர். யுத்தத்தைப் பற்றிய அபிப்பிராய வாக்கெடுப்பொன்றை நடத்தினால் மக்களில் 95% மானோர் யுத்தத்துக்கு ஆதரவாகவே வாக்களிப்பார்கள். அவ்வாறு நடந்திருந்தால், இலங்கையிலிருந்து நல்லதொரு செய்தி சர்வதேசத்துக்குக் கிடைத்திருக்கும்.

இதில் இன்னொரு விடயமென்னவென்றால் மேல் மாகாண தமிழ், முஸ்லிம் மக்கள் பெரும்பாலாக அரசாங்கத்துக்கு வாக்களிக்கவில்லை. இது மக்கள் இன ரீதியாக ஒதுங்கி வருவதைக் காட்டுகிறது. அரசாங்கத்தின் கண் மூடித்தனமான நடவடிக்கைகளே இதற்குக் காரணம். இது நாட்டுக்கு ஆரோக்கியமானதல்ல.

இத்தேர்தலில் ஐ.தே.க. பாரிய வீழ்ச்சியைச் சந்தித்திருக்கிறது. குறைந்த வீதத்திலும் கூட மக்கள் விடுதலை முன்னணி முன்நோக்கிச் சென்றிருக்கிறது.

கேள்வி :- ஜனநாயக மறுதலிப்பில் அரசாங்கம் ஈடுபட்டிருப்பது கடந்த கால சம்பவங்களைப் பார்க்கும்போது தெரிகிறது. இந்த நிலையை ம.வி.மு எவ்வாறு நோக்குகிறது?

பதில் :- இலங்கையில் ஜனநாயகம் ஆபத்துக்குள்ளாகி வருவது தெளிவாகத் தெரிகிறது. ஏப்ரல் 25ம் திகதி மேல் மாகாண சபை தேர்தல் நடைபெற்றது. இத்தேர்தலில் ஐ.தே.க.வோ. ஐ.ம.சு. முன்னணியோ மேல் மாகாண சபையைப் பற்றிய விவாதமொன்றுக்கு மக்களை இட்டுச் செல்லவில்லை. மாகாண சபையால் இதுவரை செய்யப்பட்ட, எதிர்காலத்தில் செய்ய எதிர்பார்த்திருக்கும் வேலைகளைப் பற்றி மக்களுக்கு விளக்கமளித்து வாக்குக் கேட்க வேண்டுமல்லவா? அவற்றைத் தெரிந்துக் கொள்ளும் வாய்ப்பு வாக்காளனுக்குக் கொடுக்கவில்லை. அது ஜனநாயகத்துக்கு எதிரானது. அடுத்ததாக அந்த இரு கட்சிகளுமே முதலமைச்சு வேட்பாளரை பெயர் குறிப்பிடவில்லை. மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமே முதலமைச்சர் வேட்பாளரை பெயர் குறிப்பிட்டது. முதலமைச்சர் யார் என்பதை அறிந்து கொள்வதும் வாக்காளனின் ஜனநாயக உரிமை. மறுக்கப்பட்டிருந்தது.

முதலமைச்சரை எவ்வாறு தெரிவு செய்யப்போகிறார்கள்? ஒரே ஒரு விருப்பு வாக்கால். அது எப்படி ஜனநாயகமாகும். இதனால் ஜனநாயகம் இழிவுபடுத்தப்பட்டது. இந்த தேர்தல் நடக்கும் சந்தர்ப்பத்தில்கூட சுயாதீன தேர்தல் ஆணையம், சுயாதீன பொலிஸ் ஆணையம் ஆகியன அமைக்கப்படாத நிலையிலேயே தேர்தல் நடந்தது. இதனால் அரசாங்கத்துக்கு நன்மையே கிடைத்தது.

தேர்தல் நடவடிக்கைகளுக்காக அரச சொத்துக்களை அரசாங்கம் பயன்படுத்தியது. அரச சொத்துக்களை அரசாங்கம் பயன்படுத்தியது. அரச ஊழியர்களைப் பயன்படுத்தியது. அரச ஊடகங்கள் வெட்கமின்றி பயன்படுத்தப்பட்டன. இது ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைக்கும் செயலாகும். அது மாத்திரமல்ல, தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த எமது கட்சியின் செயலாற்று உறுப்பினரான தோழர் பாலகே படுகொலை செய்யப்பட்டார். எமது தோழர்கள் தாக்கப்பட்டனர், எமது தேர்தல் அலுவலகங்கள் அடித்து நொறுக்கப்பட்டன. தீயிடப்பட்டன.

அரசாங்கக் கட்சிக்குள்ளேயே ஒருவருக்கொருவர் மோதிக் கொள்ளும் நிலையை ஆளும் கட்சி ஏற்படுத்தியது. அரசாங்க வேட்பாளர்கள் ஒருவரை யொருவர் சுட்டுக் கொண்டனர். குடும்பங்களிலுள்ள சிறுவர்கள் கடத்திச் செல்லப்பட்டனர். வாக்காளர்களும், எதிர்க் கட்சியினரும் பயமுறுத்தப்பட்டனர். இவற்றைப் பார்க்கும் போது நடைபெற்றது ஜனநாயக ரீதியான தேர்தலல்ல என்பது தெரிகிறது. கிழக்கு மாகாண முதலமைச்சரின் கோஷ்டியை சேர்ந்தவர்கள் வர்சா என்ற பச்சிளம் பாலகியைக் கற்பழித்துக் கொலை செய்தனர். பிள்ளையானின் அலுவலக மொன்றின் வைத்தே இப்பாதகச் செயல் நடந்திருப்பதாகக்கூறப்படுகிறது. அப்பாதகச் செயலை ஏன் செய்தார்கள் என்ற தகவலும் தற்போது வெளிவந்துக் கொண்டிருக்கிறது. பிள்ளையானின் கட்சி கூட்டமைப்பின் ஒரு அங்கமாக இருப்பதை யாரும் மறந்து விடக்கூடாது. பச்சிளம் பாலகியைப் படுகொலை செய்தற்கான காரணத்தை கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் சுயமாகவே பொலிசாரிடம் தெரிவித்துள்ளனர். இதனை நாட்டு மக்கள் அறிவார்கள் இவர்கள் பொலிஸ் பாதுகாப்பில் இருக்கும் போதே பல்வேறு நிலைகளில்" "மரணித்ததாக" செய்திகள் வந்தன. விசாரணை மேற்கொண்டிருந்த பொலிஸ் அதிகாரி வேறிடத்துக் மாற்றஞ் செய்யப்பட்டார். விசாரணைகள் அத்தோடே முடிவடைந்து விட்டன.

கடந்த காலங்களில் ஊடக நிறுவனங்கள் கொழுத்தப்பட்டன ஊடக வியலாளர்கள் வெள்ளை வானில் வந்தவர்களால் கடத்தப்பட்டனர் சில ஊடக வியலாளர்கள் தாக்கப்பட்டனர். சிலர் கொலை செய்யப்பட்டனர். விசாரணைகள் இல்லை. சந்தேக நபர்கள் கைது செய்யப்படவில்லை. இதற்கு பின்னணியில் அரசாங்கம் இருப்பதனாலேயே விசாரணை நடக்கப்படுவதில்லையென பரவலான சந்தேகமொன்றிருக்கிறது.

நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீர்குலைந்துள்ளன. மக்களின் ஜனநாயக உரிமைகள் ஒவ்வொன்றாகப் பறிக்கப்படுகின்றன. இக்கொடூரச் செயல் பாதுகாப்பு அமைச்சால் வழங்கப்பட்ட ஆயுதங்களைக் கொண்டே செய்யப்படுகின்றன. இவற்றை அவதானிக்கும்போது கொடுங்கோல் ஆட்சியை நோக்கி நாடு இழுத்துச் செல்லப்படுவது தெரிகிறது.

கேள்வி :- அரசாங்கம் நாட்டுக்குத் தனது தேசாபிமான வேடத்தைக் காட்டினாலும், இந்தியா உள்ளிட்ட வெளிநாட்டுச் சக்திகளுக்கு அடிபணிந்து செயல்படுவது தெரிகிறது. அரசாங்கத்தின் இந்த இரட்டை நிலையை விளக்கினால்,?

பதில் :- அரசாங்கத்துக்கு

*11ம் பக்கம்...*

www.padippakam.com



ஏப்ரல் 1971

# போராட்டத்தின் நீங்காத நினைவுகள்!

வசந்தத்தை வரவேற்பதற்காக வண்ணப் பறவைகள் குரலெழுப்ப, குயில்களின் குரலோசை அகில மெங்கும் இசை மீட்க, வசந்தத்தின் இளந்தென்றல் இதமாக வீச, மரங்களில் பூத்துக் குலுங்கிய மலர்களின் சுகந்தம் எங்கும் பரவியிருந்தது. அது ஏப்ரல் 1971

ஒரு கணம் உலகமே ஸ்தம்பித்து விட்டது போன்ற ஓர் உணர்வு. குயிலின் குரல்வளையை யாரோ நசுக்குவது போன்றிருந்தது. வானத்தில் வட்டமிட பறவைகள் சிறகடிக்க மறந்தனவோ! மலர்களின் வாசனையை திருடிவிட்டனரோ! மலர்களின் இதழ்களில் ஒட்டை விழுந்திருக்கிறது. வாசனைக்குப் பதிலாக உதிரம் சிந்துகின்றன மலர்கள்.

ஆம்! தமது சகோதர மக்களுக்கு நல்லதொரு நாட்டை நிர்மாணிப்பதற்காக, தாய் மண்ணின் உண்மையான விடுதலைக்காக எதுவரினும் இக்கணமே ஈர்ந்திடத் தயாராக இருந்த இந்நாட்டின் தவப் புதல்வர்களுக்கெதிராக, கொடுங்கோலரின் துப்பாக்கிகள் குறிவைக்க பட்டிருந்த நிலையில், மண்டியிட்டு வாழ்வதை விட, நெஞ்சு றுதியுடன் துணிந்து நின்று மடிவதே மேலென எண்ணிய இளைஞர்கள் விடுதலைக்காக போராடத் தீர்மானித்தினர். இந்நாட்டு முதலாளித்துவ வரலாற்றில் முதலாவது இளைஞர் கிளர்ச்சி இவ்வாறு தான் 1971ல் ஆரம்பமாகியது.

மானிட சமுதாயத்தை அடிமையாக்கி, ஒடுக்கப்பட்ட மக்களை அடிமைத்தனத்தின் உச்சாணியில் நிறுத்திய இந்த நாசகார சமுதாய முறைக்கு எதிராக, உரத்துக் குரலெழுப்பிய தீரமிக்க இளைஞர் சமுதாயத்தைக் குறைகூறி, அவதுாறுகளாலும், அடக்குமுறையாலும் ஒழித்துக்கட்ட முயன்றனர் முதலாளித்துவ கொடுங்கோலர்.

யார் என்ன கூறினாலும், 1971 ஏப்ரல் எழுச்சி, இலங்கை வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதாகும். அது போர்கருணம் கொண்ட இளைஞர்களின் தான் தோன்றித்தனமான செயலல்ல. மானிட சமுதாயம் சொத்துக்களை வைத்து பிரிக்கப்பட்ட நாளிலிருந்து, சொத்துடைய வர்க்கம், ஒடுக்கப்பட்ட மக்களை அடக்கி ஒடுக்கி மிதிக்கத் துவங்கிய நாளிலிருந்து, அதற்கெதிராக ஒடுக்கப்பட்ட மக்கள் போராடினார்கள். போராடவேண்டும் என்ற ஆசையினாலோ, தலைக்கனத்தினாலோ அவர்கள் போராடவில்லை. தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்ள வேறு வழியில்லாத காரணத்தினாலேயே அவர்கள் போராட்டப் பாதையைத் தெரிவு செய்தனர்.

எவ்வாறாயினும், 1971ல் நீதிக்காகப் போராடிய இளைஞர்களின் இயக்கத்துக்கு எதிராக துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து

> ஏகாதிபத்தியத்துக்கு அழிவு! மக்களுக்கு விடுதலை! முதலாளித்துவத்துக்குத் தோல்வி சோசலிசத்துக்கு வெற்றி! என்ற கோசத்தை முன்வைத்து ஆளும் முதலாளித்துவ வர்க்கத்துக்கெதிராக ஒருமித்து குரலெழுப்பிய அந்த விடுதலை வீரர்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டார்கள்.

பல்லாயிரக்கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்த கொடுங்கோல் ஆட்சியாளர்கள், அந்தப் புரட்சிகர இளைஞர் இயக்கத்துக்கு எதிராக அவதூறுகளை அள்ளி வீசினார்கள் அவமானப்படுத்தினார்கள், இனவாதிகள் என்றார்கள். ஆனாலும், அந்த இளைஞர்களின் உயர்ந்த நோக்கத்தையும், தெளிவான சிந்தனையையும், தியாகத்தையும் அவர்களால் அழிக்க முடியவில்லை. இந்த விடயத்தில் ஆளும் வர்க்கம் தோல்வியடைந்தது.

1971 போராட்டத்தில் பங்கேற்ற இளைஞர்களை தவறாக வழிநடத்தப்பட்டவர்கள் என்ற பட்டத்தையும் கொடுத்து அவர்களைத் தவறாக வழி நடத்தியதாக மக்கள் விடுதலை முன்னணியின் ஸ்தாபகரும், தலைவருமான அன்புக்குரிய தோழர் ரோஹண விஜேவீர அவர்கள் மீது அபாண்டமாக குற்றஞ் சுமத்தியது ஆளும் வர்க்கம். அதற்காக எந்தெந்த வழிகளையெல்லாம் பயன்படுத்த முடியுமோ அத்தனையையும் அன்றைய ஆளும் வர்க்கம் பயன்படுத்தியது. பல்வேறு நபர்கள் பயன்படுத்தப்பட்டனர். அரசாங்கத்தின் எடுபிடிகள் பயன்படுத்தப்பட்டனர்.



குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழுவை நியமித்து, போர்க்குணம் கொண்ட அந்த இளஞ்சிங்கங்களை விசாரணைக்காக நிறுத்தி அவர்கள் மீது அவதூறுகளையும், அவமானங்களையும் தொடுத்து. தவறாக வழிடநத்தப்பட்டவர்கள் என்ற முத்திரை குத்தியது ஆளும் வர்க்கம்

இந்தக் குற்றவியல் நீதி விசாரணை ஆணைக்குழுவின் முன்தோன்றி, வக்கீல்களின் துணையின்றி தனது பக்க நியாயத்துக்காக, தலைசிறந்த வக்கீல்களும் வியக்கும் வண்ணம் வாதாடினார் தோழர் ரோஹண விஜேவீர. 1971 கிளர்ச்சி தோல்வியடைந்த பின்னர், புரட்சியைக் காட்டிக் கொடுத்த துரோகிகளும், இடதுசாரிப் போர்வையில் ஆளும் வர்க்கத்துக்கு ஆலவட்டம் வீசியவர்களும் அரச தரப்பு சாட்சிகளாக மாறி தோழர் ரோஹண விஜேவீரவுக்கெதிராக பொய்களையும். புனைந்துரைகளையும், கட்டவிழ்த்து விட்டனர். இவற்றுக்கெல்லாம் சளைக்காத தோழர் ரோஹண விஜேவீர, மக்கள் விடுதலை முன்னணி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கத்தையும், கொள்கைகளையும், ஆணைக்குழு முன்னிலையில் தெளிவாக முன்வைத்தார். முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தின் கோரப்பிடியில் சிக்கி ஒடுக்கப்பட்ட மக்கள்படும் அவலத்தை ஆணைக்குழுவின் முன்னிலையில் விலாவாரியாக எடுத்துரைத்தார். சட்டத்துக்கு நீதியில்லை, நீதிக்குச் சட்டமில்லை! என்ற கூற்றை முன்வைத்து வாதாடினார். இவரது வாதத் திறமையைக் கண்ட பிரபல வக்கீல்களே ஆச்சரியமடைந்தனர்.

விசாரணையின்போதும், விசாரணையின் பின்னரும் சிறையிலடைக்கப்பட்டிருந்தபோது 71ன் புரட்சி வீரர்கள் நடந்துக் கொண்டவிதத்தையும், செயல்களையும், எழுத்துக்களையும் பார்க்கும்போது அவர்களது உயர்ந்தநோக்கம் என்னவென்பது நன்றாகத் தெரிந்தது. அவர்கள் இந்நாட்டை நேசித்தார்கள். மக்களை நேசித்தார்கள், இந்த உலகிலேயே இலங்கை வளமிக்க நாடாக இருக்க வேண்டுமென்ற கனவோடு செயல்பட்டார்கள். இது ஒரே நாடு! இங்குள்ள மக்கள் அனைவரும் சமம் ஏற்றத்தாழ்வுகள் இருக்கக்கூடாது, இந்நாட்டில் வாழும் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் அனைவருக்கும் சமவுரிமை கிடைக்கவேண்டும். ஆண்டான் அடிமை என்ற பேச்சுக்கே இங்கு இடமிருக்கக்கூடாது, அந்நிய சக்திகள் எமது நாட்டின் தன்னாதிக்கத்தின் மீது தலையிடும் நிலை ஏற்படும் பட்சத்தில் இந்நாட்டு மக்கள் எல்லோருமே சேர்ந்து அதனை எதிர்க்கவேண்டும். தலையீடு இல்லாமலாகும் வரை துணிந்து போராடவேண்டும் என்ற உயர்நோக்கம் அவர்களிடமிருந்தது.

> “JVP இனவாதக்கட்சி என்ற பொய்ப்பிரச்சாரத்தை தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே வெட்கமின்றி பரப்பியது ஆளும் முதலாளித்துவ வர்க்கம். இதனால், தமிழ்பேசும் மக்களிடத்தில் மவிமு ஒரு இனவாதக் கட்சி என்ற கருத்து வேரூன்றப்பட்டது. இந்தக் கருத்து முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினாலும் அதன் எடுபிடிகளாலும் சோசலிச வேசம் போட்ட முதலாளித்துவ ஏஜென்டுகளாலும் பரப்பப்பட்ட இந்தக் கருத்துக்கு சாட்டை அடியாக, அன்று சிறைச்சாலைத் திணைக்களத்தில் சிறை அதிகாரியாகக் கடமையாற்றி சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்களின் வார்த்தைகள் அமைந்திருக்கின்றன.”

அவ் இளைஞர்களின் நோக்கம் நிறைவேறினால் தமது ஆட்சிக்கும், அதிகாரத்துக்கும், உல்லாச வாழ்க்கைக்கும் ஆபத்து வந்து விடுமோ என்று பயந்த முதலாளித்துவ வர்க்கம், கடுமையான அடக்கு முறையைக் கட்டவிழ்த்துவிட்டு ஆயிரக்கணக்கான இளைஞர்களைப் படுகொலை செய்து 71 ஏப்ரல் கிளர்ச்சியை அடக்கியது.

JVP இனவாதக்கட்சி என்ற பொய்ப்பிரச்சாரத்தை தமிழ் பேசும் மக்கள் மத்தியிலே வெட்கமின்றி பரப்பியது ஆளும் முதலாளித்துவ வர்க்கம். இதனால், தமிழ்பேசும் மக்களிடத்தில் ம.வி.மு ஒரு இனவாதக் கட்சி என்ற கருத்து வேரூன்றப்பட்டது. இந்தக் கருத்து முதலாளித்துவ ஆளும் வர்க்கத்தினாலும் அதன் எடுபிடிகளாலும் சோக்ஷலிச வேக்ஷம் போட்ட முதலாளித்துவ ஏஜென்டுகளாலும் பரப்பபட்ட இந்தக் கருத்துக்கு சாட்டை அடியாக, அன்று சிறைச்சாலைத் திணைக்களத்தில் சிறை அதிகாரியாகக் கடமையாற்றி சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்களின் வார்த்தைகள் அமைந்திருக்கின்றன.

1971 கிளர்ச்சியில் ஈடுபட்ட இளைஞர்களை அடைத்து வைத்திருந்த ஒருமுகாம் தான் ஷஷ கங்கொடவில கேம்ப. வித்தியோதய பல்கலைக்கழகத்தில் அமைத்திருந்த இத்தடுப்பு முகாமில் கடமையாற்ற எமது திணைக்களத்தைச் சேர்ந்த ஜெயிலர்களில் பெரும்பாலானோர் விரும்பவில்லை.

சேகுவேரா குழு என்பது மிகப்பயங்கரவாதிகள் என எமது மக்கள் எண்ணிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் தமிழ் மக்களுக்கு எதிரானவர்கள் எனக் கருதினார்கள். என்றாலும் படித்தவர்கள் மத்தியில் அவ்வாறானதொரு கருத்து இருக்கவில்லை. சிங்களவர், தமிழர், முஸ்லிம் என்ற பேதம் அவர்களிடத்தில் இருக்கவில்லை. அவர்களுடைய அரசியலை ஆழமாக ஆராயவேண்டுமென்ற கருத்தியலொன்று படித்த தமிழ் மக்களிடத்திலிருந்து. எனவே, அந்த முகாமில் கடமையாற்றுவதற்காக நான் அங்கு சென்றேன்.

சர்வதேச ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் கைதிகளுக்கான உரிமைகள் கூட அங்கு இருக்கவில்லை.

வித்யோத்தய தடுப்பு முகாமில் 600-700 பேருக்கே இடமிருந்தது. என்றாலும் இங்கே 11,000 பேர் தடுத்துவைக்கப்பட்டிருந்தனர். அங்கு பல்வேறு பிரச்சினைகளில் இருந்தன. சிலர் படிக்கட்டுகளில் நித்திரை கொண்டனர். ஒரு பக்கம் திரும்பிப்படுத்தால் மறுபக்கம் திரும்ப முடியாது. அடுத்ததாக உணவுக்கான வரிசை. காலையில் பாண் பேறலின். காலையில் ஒருவர் முதல் வரிசையிலிருந்து முதலாவதாகப் பானைப் பெற்றுக் கொண்ட பின்னர் அவர் பகல் உணவுக்காக வரிசைக்கு வரும்போதும் சிலர் காலை உணவுக்காக வரிசையில் நிற்பார்கள்.

பிரதான ஜெயிலர்கள் ஒரு நாளைக்கு இரண்டு முறை மாறுவார்கள். அந்த இரண்டு முறையும் 11,000 பேரையும் கணக்கெடுக்க வேண்டும். பகல் 1 மணிக்கு மாறும்போது கணக்கெடுப்பது தான் கக்ஷ்டமான காரியம் ஏனெனில் வெய்யில் சுட்டெரிக்கும். அந்நேரத்தில் அவர்களும் வெப்பத்தைத் தாக்குப்பிடிக்க முடியாமல் தவிப்பார்கள் கணக்கெடுத்து முடிய 2 மணித்தியாலங்கள் செல்லும். பத்து நிமிடங்களையே அதற்காக எடுத்துக்கொள்ளுவேன். நூறு, நூறு பேராக 11 வரிசையில் நிற்க வைத்து, குறைந்தவர்களை தனியாக வரிசையில் நிறுத்துவேன். இவ்வாறாக இலகுவில் கணக்கெடுத்து முடித்து விடுவேன். அவர்கள் நல்ல இளைஞர்கள் என்பதை நான் அறிந்துக் கொண்டேன் அவர்களோடு கடமையாற்றுவது எனக்கு இலகுவாக இருந்தது. இவர்கள் தனி நபர்களுக்கெதிராக கிளர்ச்சி செய்யவில்லை சமூக, பொருளாதார முறைக்கு எதிராகவே போராடினார்கள்.

மக்கள் விடுதலை முன்னணி என்றுமே இனவாதிகளாக இருந்ததில்லை என்பது திரு. சுப்பிரமணியம் சிவப்பிரகாசம் அவர்களின் வார்த்தைகளிலிருந்து தெரியவருகிறது. 71ல் விதைக்கப்பட்ட எமது தாயகத்தின் தவப்புதல்வர் தம்மை அழித்தாலும் தமது குரலை அழிக்க முடியாதென அன்று உரத்துக்கூறியதற்கேற்ப, இன்றும், முதலாளித்துவ ஆட்சியாளர்களாலும் ஏகாதிபத்தியத்தின் கைக்கூலிகளாலும் மக்கள் விடுதலை முன்னணியை அழிக்க முடியாது என்பது இன்று நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஏகாதிபத்தியத்துக்கு அழிவு! மக்களுக்கு விடுதலை! முதலாளித்துவத்துக்குத் தோல்வி சோக்ஷலிசத்துக்கு வெற்றி! என்ற கோசத்தை முன்வைத்து ஆளும் முதலாளித்துவ வர்க்கத்துக்கெதிராக ஒருமித்து குரலெழுப்பிய அந்த விடுதலை வீரர்கள் புதைக்கப்படவில்லை விதைக்கப்பட்டார்கள்.

www.padippakam.com



# சீனாவின் பொருளாதாரம் 6.5% தால் உயர்வு!



முதலாளித்துவ பொருளாதார முறை வீழ்ச்சியடைந்து உலக நாடுகளில் பல இலட்சக்கணக்கானவர்கள் தொழில் இழந்துள்ளார்கள்.பல ஆயிரக்கணக்கான தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளன. அமெரிக்காவை தலைமையாகக்கொண்டு இயங்கும் உலக பொருளாதாரம் 1.3 வீதத்தால் வீழ்ச்சிகண்டுள்ளது. இரண்டாம் உலகப்போருக்கு பின்னர் பின்னரான பாரிய பின்னடைவாக உலக சர்வதேச நாணய நிதியம் சுட்டிக்காட்டுகிறது. ஆனால் தற்போதைய தகவல்களினபடி அமெரிக்காவின் பொருளாதாரம் 2.8 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது. இறுதி காலாண்டில் அமெரிக்கா உள்ளிட்ட செல்வந்த நாடுகளின் பொருளாதாரம் 7.5 வீதத்தால் வீழ்ச்சிகண்டுள்ளதாகவும் சர்வதேச நாணயநிதியம் மேலும் தெரிவிக்கி றது. அதே சமயம் சோஸலிஸ நாடான சீனாவின் பொருளாதாரம் 6.5 வீத்தால் உயர்ந்துள்ளதாக சர்வதேச நாணயநிதியம் மேலும் சுட்டிக்காட்டுகிறது. உலகில் முதலாளித்துவ நாடுகள் பொருளாதாரத்தில் வீழ்ச்சியடையும் சந்தர்ப்பத்தில் சோஸலிஸ நாடான சீனா பொருளாதார ரீதியில் உயர்ந்திருப்பது உலக பொருளாதார நிருனர்களை விழிபிதுங்க வைத்துள்ளது.

## மெக்சிகோவில் தினமும் 6000 பேர் வேலை இழப்பு!



மெக்சிகோவில் தினமும் 6000 பேர் தமது தொழிலை இழப்பதாக தெரியவருகிறது. பொருளாதார நெருக்கடியின் விளிம்பில் இருக்கும் மெக்சிகோவில் தற்காலிக பணியாளர்களே பெரிதும் பாதிக்கப்படுகிறார்கள். கடந்த 2008 நவம்பர் மாதம் முதல் இந்த வேலை இழப்பு தொடர்பாக மெக்சிகோ சமூகநல மையத் தகவலை மேற்கோல்காட்டி ஏஜென்ஸி செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது. அதாவது நவம்பர் முதல் 2009 ஜனவரி வரையில் 5 இலட்சம் பேர் வேலை இழந்துள்ளதாகவும் குறிப்பிட்டுக்காட்டும் அந்த செய்தி நிறுவனம் மெக்சிகோவின் முன்னணி சிமெந்து தயாரிக்கும் நிறுவனமான சிமெக்ஸில் மட்டும் 18780 பேர் வேலை இழந்துள்ளதாகவும் தெரிவிக்கிறது.

# சர்வதேசம்



## கிரகிஸ்தான் அமெரிக்க இராணுவத்திற்கு காலக்கெடு! முடிவை வரவேற்கிறது ரஷ்யா!

2001ம் ஆண்டு அட்சரனிஸ்தானுக்கு இராணுவத்தை அனுப்பிய அமெரிக்கா கிர்கிஸ்தானிலுள்ள மனாஸ் விமான தளத்தை பயன்படுத்தி வருகிறது. இந்த விமான தளத்திலிருந்து விமான வீரர்களை ஏற்றிச் செல்லல், போர்தளவாடங்களை கொண்டு செல்லல் போன்ற நடவடிக்கைகளுக்கே பெரிதும் பயன்படுத்தியதாக கூறும் கிரகிஸ்தான் மனாஸ் தளத்திலிருந்து அமெரிக்க இராணுவம் வெளியேற வேண்டுமெனகடந்த 2008ம் ஆண்டு பாராளுமன்றத்தில் சட்டமொன்றையும் நிரைவேற்றியுள்ளதுடன் அந்த அறிவித்தலை கிரகிஸ்த்தான் பாதுகாப்புச்சபையின் செயலாளர் பகிரங்கமாகவே ஊடகவியலாளர் மாநாட்டைக்கூட்டி அறிவித்துள்ளார். இந்த அறிவித்தலை தொடர்ந்து தமக்கு அமெரிக்க ஆகஸ்ட் மாதம்வரை கால அவகாசம் கோரியுள்ளது. அதனை ஒத்துக்கொண்ட கிரகிஸ்தான் அரசாங்கம் மேலும் கால அவகாசம் கோருவதை அமெரிக்கா கைவிட வேண்டுமெனவும், பரிந்துரைக்கப்பட்ட காலதத்தில் வாபஸ்பெற வேண்டுமெனவும் தெரிவித்துள்ளது. கிர்கிஸ்தானின் இந்த நடவடிக்கையை வரவேற்றுள்ள ரஷ்யா,உஸ்பெக்கிஸ்தான், கஸகிஸ்தான் ஆகிய நாடுகள் தமது ஆதரவையையும் தெரிவித்துள்ளன.

## கடுமையான தடைகள் விதிக்கப்படும்!

—அமெரிக்கா



ஈரான் தனது அணுசக்தி நிகழ்ச்சி திட்டம் தொடர்பாக வழங்கும் வாய்ப்பை நழுவவிடுமாயின் கடுமையான தடைகளை எதிர்கொள்ள நேரிடுமென அமெரிக்கா தெரிவித்துள்ளது. அணுசக்தி நிகழ்ச்சி திட்டம் தொடர்பில் அமெரிக்காவுடன் தாம் பேச்சுவார்த்தை நடத்த தயார் என தெரிவித்திருக்கும் ஈரான், தனது அமைதி நோக்க விழயில் மேற்கொள்ளப்படும் அணுசக்தி திட்டம் கைவிடப்படமாட்டாது என வலியுறுத்தியுள்ளது. பொது மக்களுக்கான சக்திப்பிறப்பாக்கம் என்னும் போர்வையில் ஈரான் அணு ஆயுதங்களை தயாரிக்க முயற்சிக்கிறது. இந்நிலையில் அணுசக்தி விவகாரம் தொடர்பில் ஈரான் மறுக்கவோ அல்லது பேச்சுவார்த்தை தோழ்வியடையும் தருவாயில் கடுமையான தடைகளை ஈரான் எதிர்கொள்ள நேரிடும் அமெரிக்கா மேலும் தெரிவித்துள்ளது,

## எந்த சவாலையும் எதிர்கொள்ளத் தயார்!

— ஈரான்



மிகவும் பயங்கரமான இரசாயன ஆயுதங்கள் ஈராக்கில் இருப்பதாக உள்நுழைந்த அமெரிக்கா தற்போது ஈரான் பக்கம் திசைதிரும்பியுள்ளது. அதற்கான காரணம் ஈரான் அணுத்திட்ட சோதனையை மேற்கொண்டதனா லூகும். உலக பொலிஸ்காரனான அமெரிக்கா ஈரானை நோக்கி விரல் நீட்டுவதை விமர்சித்துள்ள ஈரான் நாட்டு அதிபர் மஹ்மூர் அஹ்மதி நிஜாத் தமது அணுத்திட்டங்கள் சமாதானத்துக்கானவை. ஈரான் இவ்விடயம் தொடர்பாக உலக வல்லரசுகளுடன் காத்திரமான பேச்சு வார்த்தை மேற்கொள்ள ஈரான் தயாராகவே உள்ளது என அறிக்கை வாயிலாக தெரிவித் துள்ளதுடன் அணுத் திட்டங்கள் தொடருமெனவும் அதில் அழுத்தமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் இவ் விவகாரம் தொடர்பாக கலந்துரையாடுவ தற்கு அனைத்து தரப்புகளுக் கும் ஏற்ற ஒரு முறையினை தாம் முன்வைக்க வுள்ளதாகவும் அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# அரியநூல் அமெரிக்க ஜனாதிபதிக்கு

அமெரிக்காவின் முன்னால் ஜனாதிபதியான ஜோர்ஜ் புஸ்ஸை பிசாசு என வர்ணித்த வெனிசுலாவின் ஜனாதிபதி அதே போல் தற்போதைய ஜனாதிபதி ஒபாமாவை முட்டாள் எனவும் கூறினார். என்றாலும் காலம் செய்யும் கோலத்தை என்னவென்று சொல்வது டிளனிடாட்டில் கடந்த மாதம் இலத்தீன் அமெரிக்காவில் நடைபெற்ற " தலைவர்களின் மாநாடு " என அழைக்கப்பட்ட மேற்குலக அரச ததலைவர்களின் மாநாட்டில பங்கேற்ற வெனிசூலாவின் ஜனாதிபதி காவேஸ் பராக் ஒபாமாவை சந்தித்து நட்புரவோடு கைலாகு கொடுத்து அரிய நூலொன்றையும் பரிசாக வழங்கியுள்ளார். எழுத்தாளரும், ஜனாதிபதியுமான பராக் ஒபாமாவுக்கு வாசிப்பதற்காக அவர் கொடுத்த நூல' என்ன? Openveins of Latin Amaricc (லத்தீன் அமெரிக்காவின் திற்நத எண்ணெய் வளம்) என்பதுதான்



அந்நூலின் பெயர் உருகுவேயின் மொன்டிவீடியோ பல்கலைகழகத்தின் விரிவுரையாளராகவிருந்த பேராசரியர் எடுவார்டோ கலியானோ எழுதிய நூலா இது 1971ல் முதன் முதலாக அச்சிட்டு வெளியிடப்பட்டது. 1960 தசாப்தத்துக்கு 5 தசாப்தங்கள் முற்பட்ட காலம்பூராவும்மேற்கத்தியர்கள் லத்தீன் அமெரிக்காவை எவ்வாறு சுரண்டினார்கள் என்பதுவும் அந்நாடுகள் எவ்வாறு அழிக்கப்பட்டன என்பதுவும் அந்நாடுகளின் கலாசாரமும், ஒழுக்கநெறி யும் எவ்வாறு சீரழிக்கப்பட்டன என்பனவும் இந்நூலில் தெளிவாகக் கூறப்பட்டுள் ளது. இலத்தின் அமெரிக்க நாடுகளின் வறுமைக்கு காரணம் அமெரிக்க உள்ளிட்ட மேற்றுலக நாடுகளே காரணம் என இந்நூலின் ஆசிரியர் குற்றிஞ்சாட்டியுள்ளார். ஒழிவு மறைவின்றி இந்நூல் எழுதப்பட் ஆரம்பக காலத்தில் சிலி, ஆர்ஜென்டீனா,உருகுவே போன்ற நாடுகளில் இந்நூல் தடை செய்யப்பட்டிருந்தது. மாவோவாத கருத்துக்கள் பெருவாரியாக இந்நூலில் காணப்பட்டமைதான் அதற்கு பிரதான காரணமாகும். "rightpundits" என்ற இணையதத்தளத்தில் இது குறித்து கருத்து தெரிவித்த இக்நேஸஸ் ரெயிலி இது அமெரிக்க ஜனாதிபதயை அவமானப்படுத்தும் செயலெனக் கூறுகிறார். அது சரியாக The Red Down என்ற திரைப்படத்தின் பிரதயை சோவியத் ஜனாதிபதிக்கும் The Rape of Nanking என்ற நூலின் பிரதியை ஜப்பானிய பிரதமருக்கும் கொடுத்ததைப் போன்றதாகுமெனவும் கூறுகிறார். எவ்வாறாயினும் ஸ்பானிய மொழியிலான அந்நூலின் மூலப்பிரதிகளில் ஒன்றை ஜனாதிபதி ஒபாமாவுக்கு ஜனாதிபதி சாவேஸ் கொடுத்துள்ளார். எனவே பரிசை பெற்றுக்கொண்ட சந்தர்ப்பத்தில் அதன் உள்ளடக்கம் குறித்து ஒபாமாவுக்கு எதுவுமே தெறிந்திருக்கவில்லை. அந்நூலைப் பெற்றுக்கொள்வதென்பது அதனோடுவரும் அவமானத்தையும் பெற்றுக்கொள்வதற்கு சமமாகுமென ரெயிளி கூறுகிறறார்.

படிப்பகம்

www.padippakam.com



மே தினம் 6ம் பக்க தொடர்

கதி தொழிலாளர்கள் மீது போலீசார் துப்பாக்கி வேட்டுக்களை தீர்த்தனர். அதன்போது 06 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர். 50 பேர் படுகாயமடைந்தனர். அதற்கு பேலீசார் தலையிட்டதினால், முதலாளிக்கு எதிரான போராட்டம் போலீசாருக்கு எதிரான போராட்டமாக மாறியது. இந்த நாட்டை சீர்குழைப்பதற்கும் பல்வேறு காடைத்தனங்களைப் புரிவதற்கும் இடமிருப்பதால் போராட்டத்தை தளராது. அமைதியாக முன்னெடுக்கும்படி தொழிலாளர் தலைவர்கள் தொழிலாளர்களுக்கு அறிவுரை கூறினர். அதற்கிணங்க தொழிலாளர்கள் அமைதியாக உரிய இடத்தை வந்தடைந்தனர். அப்போது இனந்தெரியாத நபரொருவரினால் எறியப்பட்ட கைகுண்டினால் 05 பேர் காயமடைந்தனர். ஒருவர் கொல்லப்பட்டார். கொல்லப்பட்டவர் போலீஸ் அதிகாரியாவார். அந்த நிமிடத்திலிருந்து போலீசார் ஈவிரக்கமின்றி தொழிலாளர்களை சுட்டுத்தள்ளினர். போலீஸ் அடக்குமுறை நாடு முழுவதும் தொடர்ந்தது. வேலை நிறுத்த தொழிலாளர்களைக் கண்ட இடத்தில் போலீசாரினால் தாக்கப்பட்டனர். தொழிற்சங்க காரியாலயங்கள் உடைத்து நொறுக்கப்பட்டது. அப்போதிருந்து அரசாங்கத்திற்கும் தொழிலாளர்களுக்குமிடையிலான போராட்டமாக மாறியது.

குண்டு எறியப்பட்ட சம்பவம் தொடர்பாக பொய்குற்றச்சாட்டுக்களை சுமத்தப்பட்ட தொழிலாளர் தலைவர்கள் 08 பேர் கொலை குற்றத்திற்கான நீதிமன்றத்தில் நிறுத்தினர். அவர்களது பெயர்கள் கீழ் வருமாறு

1. அல்பார்ட் ஆர் பாஸன்ன்ஸ் ( Albert R Parsons)
2 . ஒகஸ்ட் ஸ்பைஸஸ் ( August Spies)
3 . சாமுவேல ஜே பீல்டன் ( Sumuel J feielden)
4 . இயூஜின் சவாப் ( Eugene Schwab)
5 . அடொல்ப பிஸர் ( Adolph fischer)
6 . ஜோர்த் ஏங்கள் ( Gerrge Engel)
7 . லூயிஸ் லின்ஸ் ( Louis Ling)
8 . ஒஸ்கார் நீபே ( Oscar Neebe)

சாமுவேல் பீல்டனைத் தவிர ஏனைய அனைவரும் குண்டு வெடிக்கும்போது கூட்டத்தில் இருக்கவில்லை. ஆனால் அந்த உண்மையை தெரிந்துக்கொண்டும்ஆட்சியாளர்கள அவர்களுக்கு எதிராக கொலைக்குற்றத்தை சுமத்திதனர். வழக்கு விசாரணைக்கோ தெரிவு செய்யப்பட்டிருந்தோர், தொழிலாளர்களுக்கு எதிரானவர்களாகும். அதுத தண்டனை வழங்குவதற்காக பின்னர் நிருபனமானது.பிரதிவாதிகள் நீதிமன்றத்தின் முன்னால் சுயமாரியாதையுடன் திடமாக தோன்றினர். அவர்கள் அரசாங்கததின் மீதும் போலீசாரின் மீதும் கடுமையான குற்றச்சாட்டுகளை சுமத்தி தாம் சுத்தவாளியென நீதிமன்றத்தில் வாதாடினர்.

பிரகு நிதி மன்றத்தில் ஒஸ்கா நீபேவுக்கு 15 வருடசிறை தண்டணை வழங்கப்பட்டது. ஏனைய 07 பேரும் தூக்கிலிடுவதற்கு முடிவு செய்யப்பட்டது.

தூக்கிலிடும் நாள் நெருங்கியவுடன் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக நாடு முழுவதும் தொழிலாளர்கள் போராட்டங்களை முன்னெடுத்தனர். நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக வெளிநாடுகளிலிருந்த மகஜர்கள் வந்து குவியத் தொடங்கின.

இந்த எதிர்ப்பினால் சாமுவேல் பீல்டன் மற்றும் இயூஜின் சவாப்க்கு எதிரான தண்டனை வரை சிறைத்தண்டனையாக மாற்றுவதற்கு ஆளுனர் கிலிநொஸிஸ்க்கு ஏற்பட்டது..

1887 நவம்பர் 10ம் திகதி தூக்கிலிடுவதற்கு முதல் நாள் லுவின்ஸ் தற்கொலை கொலை செய்து கொண்டார். 1887 நவம்பர் 11 அலபர்ட் பாஸகஸ் , ஒகஸ்ட் ஸ்பைஸ், ஜோர்ஜ் எங்கள் மற்றும் அடொல்ப் பிஸர் ஆகிய நான்கு தொழிலாளர் தலைவர்ககள் தூக்கிலிடப்பட்டனர். அவர்கள் தண்டனைக்கு அஞ்சா நெஞ்சத்துடன் முகம் கொடுத்தனர். தூக்கிலிடுவதற்கு சற்று முன்னர் ஒகஸ்ட் ஸ்பாய்ஸ் இறுதியாக பின்வருமாறு கூறினார். எமது வார்த்தைகளை விட எமது அமைதி பலமடையும் காலம் வெகுசீக்கிரத்தில் உதயமாகும்.

1893ல் 07 வருடங்களுக்கு சிறைதண்டனை அனுபவித்து வந்த ஏனைய மூவரும் விடுதலை செய்யப்பட்டனர். இக்காலத்தில் கிலிங்நாய்ஸ் மானிலத்தின் புதிய ஆளுனராக ஜோன்பி எல்டஹல்சி பின்னர் கூறியதாவது வழக்கு விசாரணை பக்கச்சார்பாக நடத்தப்பட்டிருப்பதாவு குற்றவாளிகளாக கருதப்பட்ட 08 பேருக்கும் குற்றம் நிருபிக்கப்படவில்லையெனவும் ஒரு பக்கச் சார்பாக ஜுரார்கள் சபை தெரிவு செய்யப்பட்டிருந்ததாகவும் நீதியான முறையில் வழக்கு விசாரிக்கப்படவில்லையெனவும் குறிப்பிட்டார்.

இன்று 08 மணி நேர வேலையை அனுபவிக்கின்ற உலக பாட்டாளி வர்க்கம் உயிர் நீர்த்த வீரம் நிறைந்த அமெரிக்கதொழிலாளர் தலைவர்களின் நினைவாக மே தினத்தை நினைவு கூறுகின்றனர்.

1886 மே போராட்டம் பேரழிவில் முடிந்த போதும் தொழிலாள வர்க்கத்தின் போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டது. இன்றும் அது அவ்வாறே தொடர்கிறது.

இன்று உலகம் முழுவதும்தொழிலாளர்களின் போராட்டம் சுடர்விட்டெரிகின்றப்போதும், ஒழிலாளர்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

முதலாவது காரணி அவர்களுக்கு தொலைநோக்குடனான சர்வதேச தொழிலாளர் இயக்கம் இல்லாமையாகும். அடுத்ததாக தொழிலாளர் போராட்டம் எழுந்துள்ளபல நர்டகளில் அதற்கு தலைமை தாங்கக்கூடிய உயரிய பண்பு நிறைந்த வர்க்க இயக்கம் இல்லாமை. இருக்கின்ற இயக்கங்களும் சீர்திருத்தவாதத்திற்கு அடிபணிந்த இயக்கங்களாகும். இன்று உலகம் மாறியுள்ளது அதை நன்கு புரிந்துக்கொண்டு அதற்கு ஸ்தாபனமயப்பட்ட சரியான லெனின்வாதத்தை அடிப்படையாகக்கொண்ட சர்வதேசியமும் முன்னேறிய வர்க்க சிந்தனையுடனான பாட்டாளி வர்க்க இயக்கமும் உலக முழுவதிலுமுள்ள தொழிலாள வர்க்கத்தை விழிப்படைய செய்யுமானால் அது நமக்கு கிடைக்கின்ற பெரும் பாக்கியமும் வெற்றியுமாகும். இலங்கை தொழிலாள வர்க்கத்துக்கு கூறவிருப்பதும். அதுவே யாகும்.

அரசாங்கம்...08ம் பக்க தொடர்

இரு முகங்கள் உள்ளன. ஒன்று தேசாபிமான முகமூடி, மற்றது உண்மையான முகம் இந்த அரசாங்கத்தின் தேசாபிமான முகமூடியினால் தேசத்துரோக ஜனநாயக விரோத முகத்தை மறைத்துக் கொண்டுள்ளது.

இந்தியாவுக்கோ, வேறு வெளிநாட்டுச் சக்திக்கோ அடிபணியப் போவதில்லையெனவும் நாட்டின் வளங்களை விற்கப் போவதில்லை யெனவும் அரசாங்கம் கூறுகிறது. இவை அனைத்தும் சுத்தப் பொய். இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்கு எமது நாட்டின் இறையான்மையை அரசாங்கம் அடகு வைத்து விட்டது. இது குறித்த பல்வேறு உதாரணங்களை நாம் சமர்ப்பித்திருக்கின்றோம். சமீபத்திய உதாரணம் தான் இந்தியாவுக்கும், வெளிநாடுகளுக்கும் அடிபணிந்து யுத்த சூனிய பிரதேசமொன்றை அமைத்தமை. இதனால் புலி பயங்கரவாதிகளே நன்மையடைந்தனர். 48 மணிநேர யுத்த நிறுத்தமொன்றை அரசாங்கம் அறிவித்தது. 48 மணித்தியாலங்களுக்கு ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டாமென பாதுகாப்புப் படையினருக்கு உத்தரவிடப்பட்டது. இது ஒரு அரசியல் தீர்வு. இந்த கட்டளை பிறப்பிக்கப்படும் வேளையில் பாதுகாப்புப் படையினர் புலித்தலைவர்களை ஒரு சிறிய பிரதேசத்துக்குள் சுற்றி வளைத்திருந்தனர். இராணுவமும் இதனைக்கூறியது. அரசாங்கமும் கூறியது. இன்னும் ஓரிரு தினங்களில் பிரபாகரன் உள்ளிட்ட புலிகளின் தலைவர்களை கைது செய்வதாக அரசபிரதானிகள் கூறினர்.

மக்கள் விடுதலை முன்னணியினராகிய எமக்கும் இந்நாட்டு புத்தி ஜீவிகளுக்கும் மத்தியில் சந்தேக மொன்று எழுந்திருக்கிறது. இந்த 48 மணிநேர இடைவெளியைப் பயன்படுத்தி புலிகளின் தலைவர்கள் தப்பி விட்டனரா? இல்லையா? அவர்கள் தப்பவில்லையென்றால் அவர்கள் புலிகளா? இல்லை கழுதைகளா?

இந்த 48 மணிநேர யுத்த நிறுத்தம் புலிகளோடு அரசாங்கம் செய்துக் கொண்ட இரகசிய ஒப்பந்தத்தின் காரணமாக மேற்கொள்ளப்பட்டதாக சந்தேகமும் எழுகிறது. இந்த சந்தேகத்தை அரசாங்கமே நிவர்த்தி செய்ய வேண்டும்.

நாட்டின் வளங்களை விற்பதில்லையென அரசாங்கமும் ஜனாதிபதியும் கூறுகின்றனர். என்றாலும் பாதுகாப்புப் படையினரின் உயிர்த்தியாகத்தினால் மீட்கப்படும் தாயகத்து வளங்கள் இந்தியா உள்ளிட்ட வெளிநாடுகளுக்குத் தாரை வார்க்கப்படுகின்றன. இதுதான் அரசாங்கத்தினதும், ஜனாதிபதயினதும் தேசத்துரோகச் செயல். பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்ட சுன்னாகத்திலுள்ள களஞ்சியங்களுக்கு எண்ணெய் வழ்ங்கும் பொறுப்பை 10C என்ற இந்திய நிறுவனத்திடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. பெற்றோலியக்கூட்டுத்தாபனத்துக்கு கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான இலாபம் இந்திய நிறுவனத்துக்குக் கிடைக்கிறது. கொடவாய மணல் அகழ்வு இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மன்னார் எண்ணெய் வளம் இந்தியாவுக்கு தாரைவார்க்கப்பட்டுள்ளது. அங்கிருந்து பெறப்படும் எண்ணெயில் 10 இல் 9 பங்கு இந்தியாவுக்குச் செல்கிறது.

ஆகமொத்தத்தில் அரசாங்கம் தேசபிமான முகத்தைக் காட்டி மக்களை ஏமாற்றி வருகிறது.

கேள்வி :- எதிர்வரும் மே 14ம் திகதிக்கு மக்கள் விடுதலை முன்னணிக்கு 44 வயதாகிறது. மக்களுக்கு வழி காட்டும் கட்சியின் தலைவர் என்ற வகையில் இது குறித்து நீங்கள் என்ன கூறுகிறீர்கள்?

பதில் :- இந்த 44வது வருட பூர்த்தியாகும் இச்சந்தர்ப்பத்தில் இவ்வளவு தூரம் பயணம் செய்தற்கான ஆற்றலும், வாய்ப்பும் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியிலேயே எமக்கு கிடைத்தது. எமது கட்சியை பூண்டோடு ஒழித்துக்கட்ட ஒருமுறையல்ல, இரு முறை முயற்சிக்கப்பட்டது. அந்த பயங்கர சதிகார முயற்சி தோற்கடிக்கப்பட்டது. மக்கள் விடுதலை முன்னணி இன்று நாட்டில் ஆழமாக வேரூன்றிய ஒரு அரசியல் கட்சி. ஏன் இப்படி?

1948ல் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட ஆளும் வர்க்கம் 5 வருடங்களுக்குப் பின்னர் தனது இயலாமையைக் காட்டியது. 1953 ஹர்த்தாலின்போது மக்களுக்குப் பயந்து நடுக்கடலில் நங்கூரமிட்டிருந்த கப்பலில் அன்றைய அமைச்சரவை கூடியது.

ஆளும் வர்க்கத்தின் இயலாமை கருத்தில் கொண்டு பழைய இடதுசாரிகளால் நாட்டுக்கு தலைமைத்துவம் வழங்க முடியவில்லை. எனவே, ஆளும் வர்க்கத்துக்கு எதிர்மாறான கட்சி யொன்று நாட்டுக்குத் தேவைப்பட்டது. அதற்கான அரசியல் இடைவெளியும் நாட்டில் இருந்தது. இந்நாட்டில் தோன்றிய தலை சிறந்த புத்திஜீவியும் புரட்சி வீரருமான தோழர் ரோஹண விஜேவீர அந்த அரசியல் இடைவெளியை நிரப்புவதில் வெற்றி கண்டார். நாட்டை சரியான பாதையில் இட்டுச் செல்லக்கூடிய மக்கள் விடுதலை முன்னணியை உருவாக்கினார். அன்று தோழர் ரோஹண விஜேவீரவால் விதைக்கப்பட்ட விதை இன்று விருட்சமாக வளர்ந்திருக்கிறது. இதுவரை சந்தித்திராத அரசியல், பொருளாதார, சமூக நெருக்கடிகளுக்கு அரசாங்கம் முகம் கொடுத்து வருகிறது. இதிலிருந்து நாட்டையும் மக்களையும் மக்கள் விடுதலை முன்னணியால் மாத்திரமே மீட்க முடியும். திருட்டு மோசடிகளில் ஈடுபட்டிராத, அரச சொத்துக்களை சூறையாடாத, வீண் விரயம் செய்யாத ஒரே முற்போக்குக் கட்சி மக்கள் விடுதலை முன்னணியேயாகும்.

www.padippakam.com



# நாட்டுக்கான தனது கடமையை ஜே.வி.பி. என்றுமே கைவிடாது!

**மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் தோழர் சோமவன்ஸ அமரசிங்க**



பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளையும், வாக்குகளின் எண்ணிக்கையையும் வைத்து மக்கள் விடுதலை முன்னணியை எடைபோட முடியாதென தோழர் சோமவன்ஸ அமரசிங்க கூறினார். நாட்டைக் கட்டியெழுப்பும், நாட்டைப் பாதுகாக்கும், மக்களுக்கு வழிகாட்டும் ம.வி.மு என்ற தலைப்பில் ஏப்ரல்2ம்திகதிநடைபெற்றகூட்டத்தில்உரையாற்றும் போதே தோழர் அமரசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து உரையாற்றிய அவர், பிரிவினைவாதம் முற்றாக ஒழிக்கப்பட்டுவிட்டது என்ற உணர்வை மக்கள் மத்தியில் உருவாக்குவதற்காக வடமுனை யுத்தத்தை அரசாங்கம் பயன்படுத்தி வருகிறது. பல்லாயிரக்கணக்கான மனித உயிர்களைப் பலி கொடுத்து பெறப்பட்ட வெற்றியை அரசாங்கம் காட்டிக்கொடுத்து வருகிறது. போலீஸ் அதிகாரங்களையும் , காணி அதிகாரங்களையும் மாகாண சபைகளுக்கு வழங்க அரசாங்கம் தயாராகி வருவது தெரிகிறது. இது அரசாங்கத்தின் கொள்கையாகுமென அரசாங்க அமைச்சர்களும் அறிக்கை விட்டு வருகின்றனர். இவ்வாறாக மக்களை ஏமாற்ற அரசாங்க த்துக்கு இடமளிக்க முடியாது.

நாடு பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்க்கொண்டு வருகிறது. உலக பொருளாதார நெருக்கடி மாத்திரம் அதற்குக் காரணமல்ல. நாட்டின் பொருளாதாரத்தை முகாமைப்படுத்துவதற்கான எந்த வேலைத்திட்டமும் கடந்த 4 வருடங்களாக அரசாங்கத்திடம் இருக்கவில்லை. அந்நியச் செலவானி விடயத்தில் எமது நாடு வங்குரோத்தடைந்திருக்கிறது. கடன் வாங்காமல் நாட்டை வழிநடத்த முடியாதநிலை ஏற்பட்டுள்ளது. என்றாலும் குறைந்த நிபந்தனைகளுடன் கடன்பெற முடியாது. கடந்த செப்டம்பர் வரை எமது நாட்டில் அந்நியச் செலவானி ஒதுக்கமொன்று இருந்தது. ஆனால் இன்று அது பூஜ்யமாக இருக்கின்றது. இந்த நெருக்கடிக்கு அரசாங்கத்திடம் தீர்வு இல்லை. 50,000 க்கும் மேற்பட்ட ஊழியர்கள் தொழிற்சாலைகளிலிருந்து தூக்கி வீசப்பட்டுள்ளனர்.

யூ.என்.பீ, சுதந்திர கட்சி என்பது இரண்டல்ல , ஒன்று தான். யூ.என.பீ. யை மக்கள் இன்று நிராகரிக்கத் தலைப் பட்டுள்ளனர். மாற்றுவழி அவர்களிடம் கிடையாது. இந்த இரு கட்சிகளும் நாட்டை அழிவுப்பாதைக்கே இட்டுச் சென்றுள்ளன. நாட்டை மீண்டும் கட்டியெழுப்பி, நாட்டை சரியான பாதையில் வழிநடத்தக் கூடிய ஒரேகட்சி மக்கள் விடுதலை முன்னணி மாத்திரமேயாகுமெனவும் தோழர் சோமவன்ஸ அமரசிங்க கூறினார்.

## இ.தொ.கா ம.ம.மு

### மேல் மாகாணத்தில் படு தோல்வி!

மத்திய மாகணசபை தேர்தலில் தோல்வியை சந்தித்த இ.தொ.கா. ம.ம.மு ஆகிய கட்சிகள் மேல் மாகாணத்திலும் படுதோழ்வியை சந்தித்துள்ளது. பல ஆயிரக்கணக்கான அங்கத்தவர்களைக் கொண்டிருக்கும் இரண்டு கட்சிகளும் இவ்விரு தேர்தல்களில் தோழ்வியடைந்த நிலையில் ஊவா மாகாணசபை தேர்தலிலும் பாரிய பின்னடைவை சந்திக்கலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றார்கள். ம.ம.மு சார்பில் போட்டியிட்ட ஒரே வேட்பாளரான கே.ரீ. குருசாமி ,இ.தொ.கா.சார்பில் போட்டியிட்ட ரோஹினிதேவி. திருக்கேஸ்வரன், சின்னப்பா ராஜரட்னம் அத்துடன் வேலம்மாள் செல்லசாமியும் தோழ்வியடைந்ததானது எதிர்காலமலையகஅரசியலைகேள்விக்குறியாக்கும் எனவும் மேலும் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# திரைசேரி திவால் அரசாங்கம் IMF ன் காலடியில்

வெளிநாட்டில் பணியாற்றும் இலங்கையரிடமிருந்து பெறப்படும் அந்நியச் செலவாணியைக் கொண்டு அந்நியச்செலவாணி ஒதுக்கத்தை நிரப்பிக் கொள்ள அரசாங்கம் மேற்கொண்ட முயற்சி தோல்வியடைந்தமையால் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து 1900 மில்லியன் அமெரிக்க டொலரை கடனாகப் பெற அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகின்றது. தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவாவது மீளும் நோக்கில், வெளி நாட்டில் உழைக்கும் இலங்கையர்களின் பணத்தை மத்திய வங்கியின் திறைசேரி உண்டியல்களில் வைப்பிலிடுமாறு ஜனாதிபதி விடுத்த தனிப்பட்ட வேண்டுகோளுக்கேற்ப, இதுவரை 17 மில்லியன் ரூபா மாத்திரமே சேர்ந்திருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த நிலைமையில், சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து மேற்படி பணத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டிய நிலை அரசாங்கத்துக்கு ஏற்பட்டுள்ளது. நிபந்தனைகள் தொடர்ப்பாக சர்வதேச நாணய நிதியத்தோடு அரசாங்கம் பேச்சுவார்த்தைகளையும் ஆரம்பித்திருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பணத்தைப் பெற்றுக் கொள்வதற்காக அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிபந்தனைகள் குறித்து எதுவும் தெரியாத நிலையில், அரச உடமைகள் தனியார்மயமாக்கப்படல், இயற்கை வளங்களை விற்றல் உள்ளிட்ட பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப் பட்டிருக்ககூடுமென நம்பப்படுகிறது. கடந்த 3 ம் திகதி அரசாங்கத்தால் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட மின்சார சபை சட்டமூலம் கூட, சர்வதேச நாணயநிதியத்திடமிருந்து கடன் பெறுவதற்காகவே நிறைவேற்றப்பட்டதாக நம்பப்படுகிறது.

# யுத்தப் பிதேசத்திலிருந்து தப்பி வரும் மக்களுக்கு உணவளிப்பதில் சிக்கல்



புதுமாத்தளன் யுத்த சூன்ய பிரதேசத்திலிருந்து வரும் மக்களுக்கு ஒருவேளை உணவு மாத்திரமே வழங்கப்படுவதாகத் தெரிய வருகிறது. இதுவரை சுமார் ஒரு இலட்சம் மக்கள் அரசாங்கப் பாதுகாப்புப் பிதேசத்தில் தஞ்சமடைந்திருக்கும் நிலையில், அவர்களுக்கு 25000 உணவுப் பொதிகள் மாத்திரமே வழங்கப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இலங்கையின் பாதுகாப்புப் படைகள் பாரபட்சமின்றி இவர்களுக்கான அனைத்துத் தேவைகளையும் கவனிக்கும் போது, அரசாங்கம் உதாசீன்ப் போக்கை கையாள்வதாக கூறப்படுகிறது.

இடர் நிவாரண அமைச்சர் உள்ளிட்ட அரசப் பிரதானிகள் தேர்தல் வேலைகளில் மும்முரமாக ஈடுபட்டிருப்பதால் பாதிக்கப்பட்ட மக்கள் சரியாகக் கவனிக்கப் படுவதில்லையெனவும் கூறப்படுகிறது. மீள் குடியேற்ற மற்றும் இடர்நிவாரண அமைச்சர் ரிசாட் பதுர் தீன் இந்த தீர்மானமிக்க சந்தர்ப்பத்தில் பொறுப்பற்று நடந்துக் கொள்வதாகவும் குறை கூறப்படுகிறது. மக்களுக்காக உணவுப் பார்சல், பிஸ்கட் போன்றவற்றை இராணுவத்தினர் தமக்குக் கிடைக்கும் உணவுகளிலிருந்தே வழங்குவதாகவும் , இராணுவத்தினர் இல்லையென்றால் அவர்கள் பட்டினிச் சாவில் தள்ளப்பட்டிருப்பார்களெனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வன்முறைகள் நிறைந்த தேர்தல்!

**மக்கள்விடுதலை முன்னணியின் பொது செயலாளர் தோழர் ரில்வின்சில்வா**

ஏப்ரல் 25ம் திகதி நடைபெற்ற மேல்மாகாணசபை தேர்தல் வன்முறைகளும், மோசடிகளும் நிறைந்த தேர்தலாகவே இருந்ததாக 27ம் திகதி நடைபெற்ற ஊடகசந்திப்பின்போது தோழர் ரில்வின் சில்வா கூறினார்.

பொதுவாகஎடுத்துக்கொண்டால்தேர்லன்றுமாத்திரம் சுமூகமான நிலை நிலவிய போதும் தேர்தல் பிரச்சார நடவடிக்கையின் போது அரச உடமைகள் தாராளமாக பயன்படுத்தபட்டப்போது அரச ஊடகங்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக அரசாங்கத்தின் சார்பாக செயற்பட்டது. இது ஜனநாயக ரீதியான தேர்தல் செயற்பாட்டை மீறுவது மாத்திரமல்ல வாக்காளனின் உரிமையிலும் அநாவசியத்த தலையீட்டுக்கு காரணமாவிருந்தது. பாதளஉலக கிரிமினல் குண்டர்கள் எதுவித அச்சமுமின்றி அரசாங்கத்தின் கூலிப்படைகளாக செயற்பட்டனர். இது சுதந்திர வாக்காளனை பயமுறுத்தும் செயலாகும் எனவும்



அமைச்சுப்பிரதானிகள் தங்களது அடியாட்களோடு தேர்தல் நடவடிக்கையில் ஈடுபட்டமையும் இந்த தேர்தல் ஜனநாயக ரீதியில் நடைபெறவில்லை என்பதற்கான எடுத்துக்காட்டுகளாகுமெனவும் அவர் லும் தெறிவித்தார்.


நியமுவாவின்
புதிய வெளியீடுகள்..

இலங்கை அரசியலில்
இந்தியாவின் தலையீடு



நன்கொடை
ரூபா 30.00

எம்மை அழித்தாலும்
எமது குரல் ஓயாது



நன்கொடை
ரூபா 200.00

நெருக்கடியில்
நிகழ்கால
கண்டதும் கேட்டதும்



நன்கொடைரூபா 30.00